விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: எட்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 கார்த்திகை 06 வியாழக்கிழமை (22.11.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 338




# விடுதலைப்புலிகளை அழிக்கும்வரை இராணுவ நடவடிக்கைகள் தொடரும்

## சபையில் பிரதமர் அறிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளை அழிக்கும்வரை இராணுவ நடவடிக்கைகள் தொடரும் என்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க சபையில் அறிவித்தார். இராணுவத்தினரின் தாக்குதல்கள் தமிழ் மக்களுக்கு எதிரானது அல்ல என்றும் அவர் கூறினார். (08 ஆம் பக்கம் பார்க்க)

## மகிந்த ரட்ணதிலக்கவுக்கு அமைச்சுப் பதவி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து அரசாங்கத்துடன் இணைந்து கொண்ட மகிந்த ரட்ணதிலக்கவுக்கு அமைச்சரவை அந்தஸ்தில்லாத புடைவைக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அலுவலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற நிகழ்வில் மகிந்த ரட்ணதிலக்க அமைச்சுப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அமைச்சுப் பதவியினை பொறுப் (08 ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)


வரணி இயற்றாலைப் பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுக் காலை சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சுட்டுக் கொல்லப்பட்டவர் அதேயிடத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சபாபதிப்பிள்ளை (வயது-50) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று மாலை ஒப்படைக்கப்பட்டது. (எ)

## அரசாங்கத்தின் அனுமதியுடனேயே பத்திரிகை அலுவலகம் தீக்கிரை

### ரணில் விக்கிரமசிங்க குற்றஞ்சாட்டு



(கொழும்பு)

அரசாங்கத்தினதும் பாதுகாப்பு அமைச்சினதும் அனுமதியுடனேயே அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்குள் புகுந்து சண்டே லீடர் நிறுவனம் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. ஊடக சுதந்திரத்தின் கழுத்தை நெரிக்கும் இச்சம்பவத்தை ஐக்கிய தேசியக் கட்சி கடுமையாகக் கண்டிக்கின்றது என்று எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (08 ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமை அமைப்பின் அலுவலகம் கொழும்பில் அமைக்கும் அவசியமில்லை

### மனித உரிமைகள் அமைச்சர் உரை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை அமைப்பின் அலுவலகமோ அல்லது சர்வதேச ரீதியாக செயற்படுகின்ற மனிதஉரிமை நிறுவனங்களின் அலுவலகமோ எதுவானாலும் கொழும்பில் நிறுவ வேண்டிய அவசியம் இல்லை என்று மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க சபையில் தெரிவித்தார்.

மனித உரிமை மீறல்களை விசாரணை செய்வதற்கான ஒத்துழைப்பையும் தொழில்நுட்ப உதவிகளையும் மாத்திரமே மேற்படி சர்வதேச நிறுவனங்களிடம் கோரியதாகவும் அலுவலகங்களை அமைக்குமாறு எந்த சந்தர்ப்பத்திலும் (08 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்கத் தூதுவர் றொபேட்டுடன் ஐக்கிய தேசியக் கட்சிக்கு நெருக்கம்

(கொழும்பு)

## முள்ளிக்குளத்தில் மோதல்

(கிளிநொச்சி)

மன்னாரில் படையினர் மேற்கொண்ட முன்நகர்வுகள் முறியடிக்கப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர். மன்னார்-முள்ளிக்குளம் தம்பனை பகுதிகளில் இரு முனைகளில் நேற்று காலை 8.00 மணியளவில் பாரிய முன்னெடுப்பில் படை

## கடும் சீற்றத்தில் அரசாங்கம்

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் றொபேட் ஓ பிளேக்கிற்கும் நெருக்கமான உறவு இருப்பதாக அரசு குற்றஞ்சாட்டியுள்ளது. இது தொடர்பாக தெரிய வருவதாவது,

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவுடன் அமெரிக்கத் தூதுவர் றொபேட் ஓ

## கடும் சீற்றத்தில் அரசாங்கம்

பிளேக் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் தேநீர் அருந்திக் கொண்டு இருந்துள்ளார். அப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் கனகசபையின் மருமகன் கடத்தப்பட்டது மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புக்கள் விலக்கப்பட்டது தொடர்பாக பல தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரணில் விக்கிரமசிங்கவிடமும் றொபேட் ஓ பிளேக்கிடமும் முறைப்பாடுகளை மேற்கொண் டிருந்தனர். (08 ஆம் பக்கம் பார்க்க)

இரு முனைகளில் நேற்று காலை 8.00 மணியளவில் பாரிய முன்னெடுப்பில் படையினர் முன்நகர்வுகளை மேற்கொண்டனர்.

இதற்கு எதிராக விடுதலைப் புலிகள் தீவிர முறியடிப்புத் தாக்குதலை நடத்தினர்.படையினரின் நடவடிக்கை பிற்பகலில் தமிழீழ விடுதலைப்புலிகளால் முறியடிக்கப்பட்டது. இதனையடுத்து படையினர் பழைய நிலைகளுக்கு பின்வாங்கி (08 ஆம் பக்கம் பார்க்க)

# சண்டே லீடர் பத்திரிகை அலுவலகம் ஆயுதக் குழுவினரால் நேற்று தீக்கிரை



## அச்சு இயந்திரப் பகுதி எரிந்தது

(கொழும்பு)

கொழும்பின் தென்பகுதியில் உள்ள இரத்மலானையில் அமைந்துள்ள சண்டே லீடர் மற்றும் மோர்னிங் லீடர் ஆகிய வார ஏடுகளின் அச்சகம் நேற்று அதிகாலை அடையாளம் தெரியாத ஆயுதக் குழு ஒன்றினால் எரித்துச் சாம்பலாக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 3.30 மணியளவில் இச் சம்பவம் நடைபெற்றிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவாக செயற்படுவதாகக் கூறப்படும் சண்டே லீடர் மற்றும் மோர்னிங் லீடர் ஆகிய வார ஏடுகள் அண்மைக் காலத்தில் வெளிப்படுத்தி வந்த பல தகவல்கள் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு அதிர்ச்சியைக் கொடுப்பதாகவே அமைந் (08 ஆம் பக்கம் பார்க்க)



## பிரித்தானியாவில் தஞ்சம்கோருவோர் வரிசையில் முதல் 10க்குள் இலங்கை

பிரித்தானியாவில் அகதி அந்தஸ்து கோருவோர் வரிசையிலுள்ள முதல் 10 நாடுகளுக்குள் இலங்கை உள்ளடங்குவதாக பிரித்தானிய உள்துறை அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியா உள்துறை அலுவலகம் வெளியிட்ட மூன்றாம் காலாண்டுக்குரிய அறிக்கையில் இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது. முதலாம் காலாண்டுடன் ஒப்பிடும் போது மூன்றாம் காலாண்டில் இலங்கையிலிருந்து அகதி அந்தஸ்து கோருவோர் எண்ணிக்கை ஒருவீதத்தால் அதிகரித்துள்ளது.

நடப்பு ஆண்டில் மட்டும் இதுவரை 245 இலங்கையர்கள் பிரித்தானியாவில் அகதி அந்தஸ்து கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. தென்னிலங்கையில் தமிழ் மக்களுக்கு இருக்கும் நெருக்கடிகள் காரணமாக ஈழத் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக புலம்பெயர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

## குடும்பஸ்தர் சரண்

உயிர் அச்சுறுத்தல் காரணமாக குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் சரணடைந்துள்ளார். 33 வயதான ஆவரங்கால் கிழக்கு புத்தூரைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையே சரணடைந்தவராவார். (ச-4)

# மடுவைக் கைப்பற்றும் நோக்கில் முன்னேறுவதற்கு இராணுவம் திட்டம்

மன்னார் மாவட்டத்தில் உள்ள மடு தேவாலயப் பகுதியை சிறுகச் சிறுக முன்நகர்ந்து கைப்பற்றுவதற்கு படையினர் முயற்சித்து வருவதாக கொழும்பில் இருந்து வெளிவரும் த பொட்டம்லைன் வார ஏடு தெரிவித்துள்ளது.

நேற்று வெளிவந்த அந்த வாரஏட்டின் பாதுகாப்பு ஆய்வுப் பத்தியில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய பகுதிகள் வருமாறு,

இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகாவின் உத்தரவுக்கு அமைய படையினர், சிறப்புப் படை நடவடிக்கைகளில் பெருமளவில் ஈடுபட்டு வருகின்றனர். வவுனியா-மன்னார் எல்லைப் பகுதியில் இந்த சிறப்புப் படையினரே நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

மிகவும் சிறந்த பயிற்சி பெற்ற இந்த படையினரையும். அதிகாரிகளையும் பயன்படுத்துவதன் மூலம் மோதல்களில் படையினரின் இழப்புக்களை குறைவாகப் பேண முடியும். போரைப் பொறுத்தவரை அது உள்நாட்டுப் போர் என்றாலும் அல்லது மரபு ரீதியிலான போர் என்றாலும் இறப்புக்களும் இழப்புக்களும் உலகின் எந்தப் பகுதியிலும் தவிர்க்க முடியாதவை.

வரவு செலவுத்திட்ட நாளான நவம்பர் 19 ஆம் திகதி படையினர், வவுனியா கிழக்குப் பகுதி மற்றும் விளாத்திக்குளம் பகுதிகளில் மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். வவுனியா கிழக்குப் பகுதியில் உள்ள நாவல்குளம் பகுதியில் 2 ஆவது கஜபா றெஜிமெண்ட் படையினரின் சிறப்பு அணியினரும், விளாத்திக்குளம் பகுதியில் 8 ஆவது கஜபா றெஜிமெண்ட் படையினரின் சிறப்பு அணியினரும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

முள்ளிக்குளம் பகுதியில் 9 ஆவது கெமுனுவோச் படைப் பிரிவைச் சேர்ந்த படையினர் விடுதலைப் புலிகளுடன் மோதல்களில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இதன்போது படைத் தரப்பைச்சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டதுடன், மேலும் ஒருவர் காயமடைந்தார். இதேசமயம் மன்னாரில் உள்ள பாலம்பிட்டியில் சிறப்பு அதிரடிப்படையினர் விடுதலைப் புலிகளுடன் மோதலில் ஈடுபட்டிருந்தனர். இந்த மோதலில் 4 படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

இதனிடையே கடந்த சனிக்கிழமை காலை இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா, இராணுவத்தின் நடவடிக்கை பணிப்பாளர் பிரிகேடியர் உதயா பெரேரா சகிதம் வவுனியாவுக்குச் சென்றிருந்தார். அங்கு வன்னிப் பகுதி இராணுவ உயர் அதிகாரிகளுடன் அவர் கலந்துரையாடல் நடத்தியிருந்தார்.

அங்கு நடைபெற்ற கலந்துரையாடலில் வன்னிப் பகுதி கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜெகத் ஜெயசூரியா, 56 ஆவது படையணியின் கட்டளைத் தளபதி ஜெகத் ரம்புக்கோத்த, 57 ஆவது படையணியின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் ஜெகத் டயஸ், முதலாவது அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் சவீந்ரா டி சில்வா, மன்னாாப் பிராந்திய கட்டளைத்தளபதி பிரிகேடியர் சன்ன குணத்திலக்க, மணலாறு பிராந்திய கட்டளைத் தளபதி பிரிகேடியர் மோகன் ஜெயவர்த்தன, சிறப்பு படையிணி கட்டளைத் தளபதி கேணல் நிர்மல் தர்மரட்ன ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமது பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பாக எல்லா இராணுவ அதிகாரிகளும் தளபதிக்கு விளக்கமளித்தனர். அதன் பின்னர் களமுனைத் தளபதிகளுக்கு சிறப்பான கட்டளைகளை வழங்கி விட்டு சரத் பொன்சேகா புறப்பட்டுச் சென்றார்.

மடுப் பகுதியை கைப்பற்றும் தமது நடவடிக்கைகள் மெதுவாக ஆனால் உறுதியாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வன்னிப் பகுதிக்கான விடுதலைப் புலிகளின் கட்டளைத் தளபதியாக கேணல் ஜெயம் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும் கொழும்புப் பகுதியில் விடுதலைப் புலிகள் ஊடுருவியுள்ளதாக படையினரின் புலனாய்வுத்துறை எச்சரித்துள்ளது. இதனைத் தொடர்ந்து முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டுள்ளதுடன்; அங்கு எழுந்தமானமாக வீதித்தடைகள் போடப்பட்டு சோதனைகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# வடக்கில் நிலவும் பிரச்சினைக்கு பேச்சு மூலமே தீர்வு காணவேண்டும்

## அரச சமாதான செயலகப் பணிப்பாளர் தெரிவிப்பு

வடக்கில் நிலவும் பிரச்சினைக்கு பேச்சுக்கள் மூலமே தீர்வு காணவேண்டும். எனினும் புலிகள் பேச்சுக்களில் ஈடுபட விரும்பவில்லை என்றால் பேச்சுக்கு யார் வர விருப்புகிறார்களோ அவர்களுடன் பேச வேண்டும். அதனையே அரசாங்கம் மேற்கொள்ள முயற்சிக்கின்றது.

ஐக்கிய இலங்கைக்குள் அதிகார பரவலாக்கல் என்ற பொதியை அரசு முன்வைக்கிறது என சமாதான செயலகத்தின் செயலாளர் நாயகம் கலாநிதி ரஜீவ விஜேசிங்க கூறினார்.

பி.பி.சி.வேல்ட் ஏசியா டுடே நிகழ்ச்சிக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். பேட்டியின் விபரம் வருமாறு,

***கேள்வி:-*** இலங்கையின் தற்போதைய நிலைமையையும் வடக்கில் தொடர்ந்து நடைபெறும் வன்முறைகளையும் எடுத்துக்கொள்வோம். 2002 ஆம் ஆண்டில் நோர்வேயின் அனுசரணையுடன் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் கைச்சாத்திட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தம், டிசம்பர் 2005 இல் செயலற்ற நிலையை அடைந்திருந்தது. இக்கால கட்டத்தில் 5ஆயிரம் பேர்கள் வரை கொல்லப்பட்டுள்ளனர் என்பதை அரசாங்கப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இம்மாதம் ஆரம்பத்தில் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அரசாங்க வான்படைத் தாக்குதலின்போது கொல்லப்பட்டார். அதே தினத்தில் கருணா லண்டனில் வைத்து கைது செய்யப்பட்டு குடிவரவுத் திணைக்களத்தினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் யுத்தத்தை விடுத்து சமாதானத்தை அடைவதற்கான நம்பகரமான சமாதானச் செயற்பாடு ஒன்று நடைமுறையில் உள்ளதா?

***ரஜீவ விஜேசிங்க:*** இங்கு பேச்சுவார்த்தைகளே முக்கியமான விடயமாகும். அதிர்ஷ்டவசமாக கடந்த நான்கு வருடங்களாக பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்கு பொதுவாக புலிகள் விருப்பம் தெரிவிக்கவில்லை. இந்நிலையில் எதிர்கால அரசியலமைப்பு பற்றி புலிகளைச் சாராத மற்றும் ஏனைய சிறுபான்மைக் குழுக்களுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை, இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் செயற்பாடொன்றின் மூலம் முன்னெடுத்துச் செல்கிறது.

***கேள்வி:-*** ஆயினும் நீங்கள் குறிப்பிடுவதாக நான் கருதும் சர்வகட்சித் செயற்பாடு தமிழர் தேசியக் கூட்டமைப்பினை உள்ளடக்கவில்லை என்பதோடு பிரதான எதிர்க்கட்சியும் அதில் கலந்து கொள்ளவில்லை. மேலும் புலிகளின் பகிரங்க முகமாகவும் புலிகளின் பேச்சுக்குழு அங்கத்தவருமான சு.ப.தமிழ்ச்செல்வனைக் கொல்வதால் நீங்கள் எந்த நன்மையை எதிர்பார்க்கிறீர்களா?

***ரஜீவ விஜேசிங்க:*** அவர் பேச்சுவார்த்தைகளில் ஈடுபாடு கொண்டிருந்தால் நாம் நிச்சியமாகப் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருக்கலாம். அவர் பேச்சுவார்த்தைகளில் இருந்து ஓரங்கட்டப்பட்டார் என நான் நினைக்கிறேன். ஆயினும் சந்தேகத்தின் சாதகத்தை நாம் அவருக்கு வழங்குவோம். கடந்த ஆண்டு பெரும் பகுதியில், அவர் இராணுவ உடை தரித்துச் சஞ்சரித்து வந்தார். அப்படியிருந்த போதிலும், எம்மை விட்டு நீங்கியுள்ள அவர் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட விரும்பியிருந்தார் என்ற நிலைப்பாட்டை அவருக்கு நாம் வழங்குவோம். இப்போது கூட அவர்கள் பேச்சுவார்த்தைகளுக்குத் திரும்புவார்கள் என்பதே எமது நம்பிக்கையாகும். (ச)

# மன்னார் பகுதியில் இருந்து 22 ஆயிரம் பேர் இடம்பெயர்வு

(கிளிநொச்சி)

இராணுவத்தினரின் தொடர்ச்சியான எறிகணை வீச்சுத் தாக்குதல்களால் மன்னாரில் 22 ஆயிரத்து 332 பொதுமக்கள் இடம்பெயாந்துள்ளனர் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் மனித உரிமைகள் விவகாரங்களுக்கான பேச்சாளர் நவரூபன் செல்வி தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் நேற்று வெளியிட்ட அறிக்கை வருமாறு,

தமிழர் தாயகத்தின் வடமேற்கு மாவட்டத்தில் மன்னார் அமைந்துள்ளது. அங்கு தமிழ் பேசும் மக்களே வசிக்கின்றனர். பெரும்பான்மையான மக்கள் கத்தோலிக்க மதத்தையும் மற்றையோர் முஸ்லிம் மற்றும் இந்து மதங்களையும் பின்பற்றுகின்றனர்.

இராணுவத்தின் தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல்களினால் மன்னாரில் விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதிகளிலிருந்து மட்டும் 22 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர் என்று மன்னார் அரச அதிபர் செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மொத்தம் 5 ஆயிரத்து 938 குடும்பங்களைச் சேர்ந்த 22 ஆயிரத்து 332 பொதுமக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்கு, அடம்பன், ஆண்டாங்குளம், பெரியமடு மற்றும் பள்ளமடு பகுதிகளை நோக்கி இராணுவத்தினர் தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இம்மக்கள் கிளிநொச்சி மற்றும் மன்னார் எல்லையோரப் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்துள்ளனர். இடம்பெயர்ந்த மக்களில் 90 விழுக்காட்டினர் விவசாயத்தை வாழ்வாதாரமாகக் கொண்டவர்கள்.

அந்த மக்கள் இடம்பெயரும்போது தங்கள் வாழ்வாதார விவசாய நிலங்களையும் கைவிட்டு விட்டு வெளியேற வேண்டிய கட்டாய நிலைக்குள்ளாகின்றனர். அந்த மக்களினது வாழ்வாதார இழப்பு மட்டுமல்ல இது. மன்னார் மாவட்டத்தின் பொருளாதாரத்தின் மீது பாரிய தாக்குதலுமாகும்.

விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதிகளுக்கான எரிபொருட்கள் தற்போது தடுக்கப்பட்ட நிலையில், அது தொடர்பிலும் அனைத்துலகப் பார்வையாளர்கள் தொடர்ந்தும் அமைதி காத்து வருகின்றனர்.

கடுமையான எரிபொருள் பற்றாக்குறையினால் பொது மக்கள் மற்றும் சிறார்களின் கல்விச் செயற்பாடுகள் கடும் பாதிப்படைந்துள்ளன என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)


**டுபாயில் வெற்றிடங்கள்**
**யூ.ஏ.ஈ.-எம்.பி.எம்.கம்பனி**

**(உடனடிப் பயணம்)**

| இல. | தொழில் | சம்பளம் |
|---|---|---|
| 01. | ஆண் சுத்திகரிப்பாளர் | டினார் 600/= |
| 02. | பெண் சுத்திகரிப்பாளர் | டினார் 500/= |

**விதிகளும் நிபந்தனைகளும்**

இரண்டு வருட ஒப்பந்தம். வேலை நேரங்கள் நாள் ஒன்றுக்கு எட்டு மணித்தியாலங்கள், வாரம் ஒன்றுக்கு ஆறு நாட்கள். இலவச தங்குமிடம். இலவச மருத்துவம் மற்றும் இலவச உணவு வழங்கப்படும். ஒப்பந்த காலவரை முடிவடைந்ததன் பின்னர் தகுதிகாண் காலவரை 90 நாட்கள்.

வயதெல்லை:- 18-45. அனுபவமுள்ளவர்கள்/ பயிலுநர்கள் தமது கடவுச் சீட்டுடன் கீழ்க் காணப்படும் முகவரிக்கு வரவும். மூன்று வாரங்களுக்குள் பயணம். நேர்முகப் பரீட்சைகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முற்பகல் 9 மணியிலிருந்து பிற்பகல் 7 மணிவரை. (ஞாயிற்றுக்கிழமையும்) திறந்திருக்கும்.

அராபியன் றோல் குறூப் (பிறைவேட்) லிமிடெட்
375, முதலாம் மாடி, ஆர்.ஏ.டி. மெல் மாவத்தை,
(டுப்பிளிகேசன் றோட்) கொழும்பு-3.
தொலைபேசி 0112 370653, 0112 502719
(டேர்டன் வைத்தியசாலைச் சந்தி அருகில் மஹாநாம வித்தியாலயத்துக்குப் பக்கத்தில்)

அனுமதி இலக்கம்:- ஏஎல்/960/ விளம்பரம்/ 03,05/07.
மேலும் தகவல்களுக்கு தங்களுக்கு அருகிலுள்ள உப முகவரைத் தொடர்பு கொள்ளவும்.
ரகுபதி-துவாரகா இலத்திரனியல்,
22,கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.
தொலைபேசி:- 0112 514003
துஷாந்தன் கந்தசாமி,
சூராவத்தை.
தொலைபேசி:-077 3405643,077 5245554
பல்கலைக்கழகங்கள், அமைச்சுக்கள் மற்றும் குடிவரவு குடியகல்வுத் திணைக்களங்கள், பூந்தோட்டங்களில் வேலைவாய்ப்பு.
**உபமுகவர்களும் தொடர்பு கொள்ளலாம்.** (க-556)



**டுபாய் ரெலிக்கொம் கேபிள் லைன் உதவியாளர்கள்**

**(உடனடிப் பயணம்-ஆண்கள் மட்டும்)**

**சம்பளம் - 800 டினார்**

**விதிகளும் நிபந்தனைகளும்**

இரண்டு வருட ஒப்பந்தம். வேலை நேரங்கள் நாள் ஒன்றுக்கு எட்டு மணித்தியாலங்கள், வாரம் ஒன்றுக்கு ஆறு நாட்கள். இலவச தங்குமிடம். இலவச மருத்துவம் மற்றும் இலவச உணவு வழங்கப்படும். ஒப்பந்த காலவரை முடிவடைந்ததன் பின்னர் தகுதிகாண் காலவரை 90 நாட்கள்.

வயதெல்லை:- 18-45. அனுபவமுள்ளவர்கள்/ பயிலுநர்கள் தமது கடவுச் சீட்டுடன் கீழ்க் காணப்படும் முகவரிக்கு வரவும். மூன்று வாரங்களுக்குள் பயணம். நேர்முகப் பரீட்சைகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முற்பகல் 9 மணியிலிருந்து பிற்பகல் 7 மணிவரை. (ஞாயிற்றுக்கிழமையும்) திறந்திருக்கும்.

அராபியன் றோல் குறூப் (பிறைவேட்) லிமிடெட்
375, முதலாம் மாடி, ஆர்.ஏ.டி. மெல் மாவத்தை,
(டுப்பிளிகேசன் றோட்) கொழும்பு-3.
தொலைபேசி 0112 370653, 0112 502719
(டேர்டன் வைத்தியசாலைச் சந்தி அருகில் மஹாநாம வித்தியாலயத்துக்குப் பக்கத்தில்)

அனுமதி இலக்கம்:- ஏஎல்/960/ விளம்பரம்/ 03,05/07.
மேலும் தகவல்களுக்கு தங்களுக்கு அருகிலுள்ள உப முகவரைத் தொடர்பு கொள்ளவும்.
ரகுபதி-துவாரகா இலத்திரனியல்,
22,கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.
தொலைபேசி:- 0112 514003
துஷாந்தன் கந்தசாமி,
சூராவத்தை.
தொலைபேசி:-077 3405643,077 5245554
பல்கலைக்கழகங்கள், அமைச்சுக்கள் மற்றும் குடிவரவு குடியகல்வுத் திணைக்களங்கள், பூந்தோட்டங்களில் வேலைவாய்ப்பு.
**உபமுகவர்களும் தொடர்பு கொள்ளலாம்.** (க-556)



**O/L-2007 மாதிரி வினாத்தாள்கள்**

*முன்னணி ஆசிரியர்களின் தயாரிப்பில் முற்றிலும் எதிர்பார்க்கப்படும் வினாக்கள் அடங்கிய சகல பாட வினாப்பத்திரங்களும் விற்பனையாகின்றன. (அக்கடமி வெளியீடு)*

- பூபாலசிங்கம்
- மொடேன்-நெல்லியடி
- கரே கிருஷ்ணா-இணுவில்
- துர்க்கா -சுன்னாகம்
- விநாயகர்-தாவடி

(624)

# இன்று ஒரு தகவல்

## மனிதனும் பொம்மையும்

``இந்த உலகத்திலே எப்படி வாழ்வது என்று தெரியவில்லை சார்!'' உங்களுக்கு ஏதாவது வழி தெரிந்தால் சொல்லுங்களேன்! என்று கேட்டார் ஒருவர். வழி சொல்லுங்கள் என்று கேட்கிறாரே... இது என்ன வடக்கே போ... தெற்கே போ... என்று சொல்கிற சமாச்சாரமா? நான் யோசித்தேன்... சரி... என்னோடு வாருங்கள் என்று சொல்லி அவரை ஒரு ``சர்ச்''க்கு கூட்டிக்கொண்டு போனேன்.

அங்கே ஒரு பாதிரியார் ஜனங்களுக்கு நல்ல வழிகளைச் சொல்லிக்கொண்டிருந்தார். அவர் சொன்ன ஒரு சின்னக் கதையிலே இவர் என்னிடம் கேட்ட கேள்விக்குப் பதில் இருந்தது. இதுதான் சார் உங்கள் கேள்விக்கு விளக்கம். என்னை விட்டுவிடுங்கள் என்று சொல்லி அவரிடமிருந்து தப்பித்துக் கொண்டேன்.

இந்த உலகத்திலே எப்படி வாழ்வது? என்கிற கேள்விக்கு எங்களுக்கு அங்கே கிடைத்த விளக்கத்தை உங்களுக்குச் சொல்கிறேன். ஓர் ஊரிலே ஒரு பெரியவர் இருந்தாராம். அவர் மக்களுக்கு நல்ல வழிகளையெல் லாம் சொல்லிக் கொடுத்து வந்தாராம். எல்லாரையும் கூப் பிட்டு ஓர் இடத்திலே உட்கார வைத்து சில செயல் விளக்கங்களையெல்லாம் செய்து காட்டு வாராம். ஒருநாள் அப்படித்தான் ஒரு கூட்டத்திலே பேசிக் கொண்டிருக்கிறார். அவருக்கு எதிரில் மேசை மீது மூன்று கண்ணாடிப் பாத்திரம் அதிலே சுத்தமான தண்ணீர். அதே மேசையில் இன்னொரு பக்கத்திலே மூன்று மனிதப் பொம்மைகள். மூன்று பொம்மையும் மனித உருவம் தான். ஆனால் அதிலே ஒரு வித்தியாசம். ஒரு பொம்மை களிமண்ணால் செய்தது. ஒரு பொம்மை பஞ்சினாலே செய்தது. இன்னொன்று சர்க்கரையிலே செய்தது. அந்தப் பெரியவர் என்ன செய்தார்? முதலிலே களிமண் பொம்மையைக் கையில் எடுத்து பக்கத்திலிருந்த கண்ணாடிப் பாத்திரம் ஒன்றினுள் அதனைப் போட்டார். அப்புறம் பஞ்சினால் செய்யப்பட்ட பொம்மையை எடுத்து மற்றொரு கண்ணாடிப் பாத்திரத்தினுள் போட்டார். அதன் பின் சர்க்கரைப் பொம்மையை எடுத்து மூன்றாவது கண்ணாடிப் பாத்திரத்தினுள் போட்டார். ஆக, மூன்று பொம்மைகளையும் மூன்று கண்ணாடிப் பாத்திரங்களிலுமுள்ள தெளிவான தண்ணீரிலே போட்டார்.

அதன்பின், எதிரிலே உட்கார்ந்திருந்த சனங்களைப் பார்த்து ``இப்பொழுது எல்லாரும் இதை நன்றாகக் கவனியுங்கள்'' என்றார். என்ன நடக்கிறது இப்பொழுது? என்று கேட்டார். களிமண் பொம்மையைப் போட்டார் அல்லவா? அந்தப் பொம்மை தண்ணீரிலே கரைந்து தண்ணீர் முழுவதும் கலங்கலாக, சேறாக ஆகிவிட்டது. பஞ்சுப் பொம்மையைப் போட்டாரே அந்தப் பொம்மை பாத்திரத்திலிருந்த தண்ணீர் முழுவதையும் உறுஞ்சி எடுத்துக் கொண்டது. சர்க்கரைப் பொம்மையைப் போட்டாரே அந்தப் பொம்மை தண்ணீரிலே கரைந்து தண்ணீருடன் தண்ணீர் ஆகிவிட்டது.

பெரியவர் அந்த மூன்று பாத்திரங்களையும் சனங்களுக்கு காட்டி அதற்கான விளக்கம் கொடுத்தார். ``இப்பொழுது மூன்று பொம்மைகளைப் பார்த்தீர்களே... இந்த மூன்றும் மூன்று வகை மனிதருக்கு உதாரணம். களிமண் பொம்மை மாதிரியுள்ள மனிதர்கள் இந்தச் சமூகம் என்கிற தண்ணீரிலே கலக்கும் போது அவர்களும் கரைந்து விடுகிறார்கள்... சமூகத்தையும் கலக்கிச் சேறாக்கி விடுகிறார்கள். பஞ்சுப் பொம்மை மாதிரி உள்ளவர்கள் சுயநல வாதிகள். சுற்றி இருப்பவை யெல்லாம் தனக்கு உபயோகப்பட வேண்டும் என்று நினைத்து உறுஞ்சிக் கொள்பவர்கள். சர்க்கரைப் பொம்மை மாதிரி உள்ளவர்கள் சமூகத்துக்காக தன்னையே கரைத்துக் கொள்வதற்குத் தயாராக இருப்பவர்கள். இவர்களாலே சமூகம் முழுவதுமே இனிப்பாக ஆகிறது.

எனவே இந்த உலகத்திலே எப்படி வாழ வேண்டுமென்று கேட்டால் சர்க்கரைப் பொம்மை மாதிரி வாழவேண்டும். இது தான் அந்தப் பெரியவர் நமக்குச் சொல்லும் விளக்கம். இதே மாதிரி நான் ஒரு செயல் விளக்கம் செய்தேன். ஒருநாள் விடியற்காலையிலே ஒரு நண்பர் வீட்டுக்குப் போனேன். உலாவப் போகிற வழியிலே அவர் வீடு. அதனாலே அடிக்கடி போவது வழக்கம். அன்று நான் போன நேரம் அவர் தேநீர் அருந்திக் கொண்டிருந்தார். என்னைக் கண்டதும் எனக்கும் ஒரு தேநீர் வந்தது. வழக்கம் போல பக்கத்திலே ஒரு கிண்ணத்தில் சர்க்கரை தனியாக வைத்திருந்தார்கள். நான் ஒரு கரண்டியால் சர்க்கரையை எடுத்துத் தேநீரில் போட்டுக் கலக்கினேன். சர்க்கரை கரைந்துவிட்டது. உடனே பேச ஆரம்பித்தேன்.

``பாருங்கள் சார்! ஒரு கரண்டி சர்க்கரை தான். இருந்தாலும் அது ஒரு டம்ளர் தேநீரிலே தன்னைக் கரைத்து தியாகம் செய்து விட்டது. தேநீர் இனிப்பாக ஆகி விட்டது. இதிலிருந்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?'' என்று கேட்டேன்.

நண்பர் நிமிர்ந்து என்னைப் பார்த்தார்! ``இனிமேல் நீங்கள் எங்கள் வீட்டுக்கு வருவதற்கு முன் தேநீரை குடித்து முடித்து விட வேண்டுமென்று நினைக்கிறேன்'' என்றார்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# அமெ.தூதர் - எதிர்க்கட்சித் தலைவர் இடையே நெருக்கம், சீற்றம் கொள்கிறது அரசு

இலங்கை நாடாளுமன்றத்தில் திங்கட்கிழமை நடைபெற்ற வரவு-செலவு திட்டம் மீதான வாசிப்பின் போது இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் றொபேர்ட் ஓ பிளேக்கின் செயற்பாடுகள் தொடர்பாக கடுமையாக விமர்சிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் அமெரிக்கத் தூதுவர் றொபேர்ட் ஓ பிளேக் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் தேநீர் அருந்திக் கொண்டு இருந்துள்ளார். அப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கனகசபாபதியின் மருமகன் கடத்தப்பட்டது மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புக்கள் விலக்கப்பட்டது தொடர்பாக பல தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரணில் விக்கிரமசிங்கவிடமும், றொபோட் ஓ பிளேக்கிடமும் முறைப்பாடுகளை மேற்கொண்டிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை தொலைபேசியில் தொடர்புகொண்ட றொபேர்ட் ஓ பிளேக் இந்த முறைப்பாடு தொடர்பாக தெரிவித்துள்ளடன், நிலைமையைக் கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் கேட்டிருந்தார். ஆனால் இதனை கோத்தபாய ராஜபக்ஷ கருத்தில் எடுக்காது அமெரிக்கத் தூதுவரை அவமதித்திருக்கின்றார்.

அதேசமயம், அமெரிக்கத் தூதுவர் றொபேர்ட் ஓ பிளேக் நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதாகவும் கோத்தபாய ராஜபக்ஷவுக்கான தொலைபேசி அழைப்பை அவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இருந்தே மேற்கொண்டதாகவும் மஹிந்த ராஜபக்ஷ விற்கும் கூறப்பட்டது. இதனைக் கேட்டு ஆத்திரமடைந்த மஹிந்த ராஜபக்ஷ வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாகம மற்றும் மேலும் ஒரு அமைச்சரையும் அழைத்து நாட்டின் உள்விவகார அரசியலில் தலையிடாது இருக்குமாறு றொபேர்ட் ஓ பிளேக்கிடம் கூறுமாறு கேட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து திங்கட் கிழமை காலை வெளிவிகார அமைச்சின் செயலாளர் பாலிதகோகன்ன, றொபேர்ட் ஓ பிளேக்கை அவசரமாக அழைத்த போதும் சமூகமாகவே உரையாடியுள்ளார். தற்போதைய நாட்டு நிலைமைகள் தொடர்பாக மிக நீண்ட நேரம் நடைபெற்ற இந்த பேச்சுக்கள் மிகவும் சுமூகமாக நடைபெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் சொத்துக்களை அமெரிக்க அரசாங்கம் முடக்கியுள்ள நிலையில் இந்த விடயத்தை பெரிதுபடுத்த வேண்டாம் என்று அரசாங்கம் எண்ணியுள்ளதாகவே பின்னர் தெரியவந்துள்ளது.

எனினும் கடத்தப்பட்டவர் நேற்று முன்தினம் மாலை விடுவிக்கப்பட்டிருந்தார். அந்த நேரத்தில் றொபேர்ட் ஓ பிளேக் ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க மற்றும் சிலருடன் இரவு உணவை அருந்திக்கொண்டு இருந்தார். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரின் உறவினர் விடுவிக்கப்பட்டது தொடர்பான தகவலை அறிந்த ரணில் விக்கிரமசிங்க, றொபேர்ட் ஓ பிளேக்கை தொடர்பு கொண்டு அதனைத் தெரிவித்துள்ளார்.

இதனிடையே அமெரிக்கத் தூதுவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தேநீர் விருந்தில் கலந்து கொண்டது சாதாரணமான ஒரு நிகழ்வு என்றும் அதேசமயம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உள்ளிட்ட பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொலைபேசி அழைப்புக்களை மேற்கொண்டது தற்செயலானது என்றும் ஐ. தே.க. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனை அரசாங்கம் தவறாக புரிந்து கொண்டுள்ளதுடன் அது தொடர்பாக தேவையற்ற கவலைகளை கொண்டுள்ளதாகவும் அவை மேலும் தெரிவித்துள்ளன. ஆனால் அமெரிக்கத் தூது வர் றொபேர்ட் ஓ பிளேக் ரணில் விக்கிரமசிங்கவுடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவை மிக நீண்ட நேரம் செலவிட்டதாகவும், றொபேர்ட் ஓ பிளேக்கின் நடவடிக்கைகள் சந்தேகத்திற்கு இடமாக இருந்ததாகவும் அரசாங்கத் தரப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (அ)

# இராசிபலன்

22.11.2007
(கார்த்திகை 06, வியாழக்கிழமை)
திரயோதசி பின்னிரவு 01.35 மணிவரை
அச்சுவினி பின்னிரவு 04.01 மணிவரை
இராகுகாலம் 01.40-03.10 மணிவரை
சுபநேரம் 07.40-09.10 மணிவரை
பிரதோஷ விரதம்

| | |
|---|---|
| மேடம் | நல்ல முயற்சி, ஆழ்ந்த சிந்தை, சயன சுகம், போசனநன்மை. |
| இடபம் | தந்தைவழி உறவு, பணவிரயம், உடல்நலக்குறைவு, முயற்சி தாமதம். |
| மிதுனம் | செய்தொழில் நன்மை, உறவினர் வருகை, காரிய அனுகூலம், போசனசுகம். |
| கடகம் | சுபநிகழ்வு, உற்சாகம், நல்ல செய்தி, காரிய நன்மை. |
| சிங்கம் | ஆரோக்கியக்குறைவு, அச்சமான நிலை, புதிய திட்டமிடல், திடீர்பயணம். |
| கன்னி | போசனசுகம், வீண்பகை, காரிய தடங்கல், எதிர்பாராத நன்மை. |
| துலாம் | அபூர்வ சந்திப்பு, பிரயாணநன்மை, விருந்துபசாரம், குடும்பமகிழ்ச்சி. |
| விருச்சிகம் | உடல்நலம், சிந்தனை மிகுதி, பொருள் சேர்க்கை, தொழில் முன்னேற்றம். |
| தனுசு | தாழ்ந்த சுபாவம், வியாபார நன்மை, முயற்சி தாமதம், குடும்பக்கவலை. |
| மகரம் | பயந்த சுபாவம், கல்வியில் ஆர்வம், பெரியோர் உதவி, உறவினர் சந்திப்பு. |
| கும்பம் | அன்னியர் சந்திப்பு, வாக்கு மேன்மை, பிரயாண நன்மை, போசன சுகம். |
| மீனம் | கோபப்படுதல், அதிகசெலவு, முயற்சி தாமதம், பித்த ரோகம். |

வ ள வ ன்

# வேலைவாய்ப்புக்காக வெளிநாடு சென்று நிர்க்கதியானோருக்கு பணியகம் உதவி

வேலைவாய்ப்புக்காக வெளிநாடுகளுக்குச் சென்று நிர்க்கதியாக்கப்பட்டு நாடு திரும்புபவர்களில் சொந்த வீடு அற்றவர்களுக்கு வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதற்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் விசேட திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதற்கு செலவையும் பணியகம் ஏற்றுக்கொள்ள இருப்பதாக பணியகத்தின் தலைவர் கிங்லி ரணவக்க தெரிவிக்கிறார். 75 வீதமான இலங்கைப் பணியாளர்கள் வெளிநாடுகளில் நிர்க்கதியாக்கப்பட்ட நிலையில் நாடு திரும்புவதாக அவர் கூறினார். நாட்டின் அன்னியச் செலாவணிக்கு பெரும்பங்கு வகிக்கும் இவர்களுக்கு பணியகத்தின் பிரதி உபகாரமாக இத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக பணியகத்தின் தலைவர் மேலும் கூறியிருக்கிறார். (அ)

# பயிற்சிப்பட்டறை 2007

உலக உணவு திட்டத்தின் கல்விக்கான உணவு பாடசாலை மட்ட பயிற்சிப்பட்டறை -2007 எதிர் வரும் 29, 30 ஆம் திகதிகளில் காலை 8.30 மணிமுதல் பி.ப.2.30 மணிவரை வடமராட்சி வலயக் கல்வி அலுவலக கணனிவளநிலையத்திலும், புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாட சாலை மண்டபத்திலும் நடைபெறவுள்ளது.

மேற்படி பயிற்சிப் பட்டறையில் பின்வருவோரை தவறாது பங்குபற்றச் செய்யுமாறும் பங்குபற்றுவோருக்கு உலக உணவுத் திட்டத்தினால் கொடுப்பனவு வழங்கப்படுமெனவும் வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். பங்குபற்ற வேண்டியோர் விபரம்,

1. அதிபர்,
2. பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயாளர் அல்லது உறுப்பினர் ஒருவர்.
3. பொறுப்பாசிரியர்
4. சமையலாளர் ஒருவர். (19)

# புதிய அல்லது திருத்திய அரசியல் யாப்பு அமைச்சர் டிலான் பெரேரா ஆலோசனை

இந்த நாட்டின் அரசியல் யாப்பில் திருத்தத்தை மேற்கொள்வதற்கு அல்லது அரசியல் யாப்பை கொண்டுவருவதற்கான காலம் உதயமாகியுள்ளதாக அமைச்சர் டிலான் பெரேரா பாராளுமன்றில் தெரிவித்தார். மூன்றாவது வாசிப்பு மீதான குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டுபேசுகையிலேயே அவர் இதனைக்கூறினார்.

தாம் அரசிலிருந்து விலகுவதாயின் வீட்டுக்குச் செல்வதை விடுத்து ஸ்ரீபதி, மங்கள போன்று செயற்படப் போவதில்லை என அவர் குறிப்பிட்டார்.

இதே வேளை எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களை அரசாங்கம் அச்சுறுத்தி வரவு - செலவுத் திட்டத்தை சாதகமாக்கிக்கொண்டதாக ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தயாஸ்ரீ விஜயசேகர பாராளு மன்றில் தெரிவித்தார்.




சேக்கிழார் விழாவையொட்டி இந்து கலாசார திணைக்களத்தினால் நடாத்தப்பெற்ற போட்டிகளில் பங்குபற்றி மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட தென்மராட்சி, தவசிக் குளம் கண்ணகை அம்மன் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் 'அப்பூதியடிகள்' நாடகத்தின் ஒரு காட்சியைப் படத்தில் காணலாம்.

# உன்னுள் உன்னைக்காண...

'தன்னகத்தே உள்ள மனிதனைப் பற்றி அறியாதவன் மற்ற மனிதர்களைப் பற்றி ஒரு போதும் அதிகம் அறியவே முடியாது' என்பார் நிக்கலாய் சேர்னி கென்ஸ்கி எனும் அறிஞர்.

தன்னகத்தே உள்ள மனிதனைத் தேடுவது என்பது சுய தேடல் மூலமே அறிய முடியும். இன்று மற்றவர்களைப் பற்றி அறிவதிலும், அவர்கள் குறை நிறைகளை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்வதிலும் உள்ள ஆர்வம் தன்னுள் தன் பலம்,ப லவீனம், ஆற்றல்,திறமைகளை தேடிக் கொள்வதில் சற்று நேரத்தைக் கூட செலவிடத் தயங்குகிறார்கள்.

தம் பெருமை பற்றி பறைசாற்ற முனையும் போது தன் தவறுகள், பலவீனங்கள் பற்றி அறிந்துகொள்வதில் நாட்டம் கொள்ளாததாலே தான் சமூகத்தில் தன்னை முன் நிறுத்த முடிவதில்லை. இவற்றுக்கு பல காரணங்களைக் கூறலாம்.

தன் குறைகளை தானே ஏற்றுக் கொள்ள முடியாமையும், குறைகளை களைய, மறைக்க, மீண்டும் பல தவறுகளை செய்யும் நிலைகளும், சமூகம் தன்னைத் தப்பாக எடைபோட்டு விடுமோ என்ற பய உணர்வுகளும், தவறுகளைத் தாங்கி மீள முயலாமையும், தன்னுள்ளே தனக்கு எல்லைகள் போட்டுக் கொள்வதாலும், புன்னகை பூக்க வேண்டிய முகங்கள் கூட வாடிய மலர் போன்ற முகங்களாக உளக்காயத்தின் வெளிப்பாடுகளையே வார்த்தைகளாகவும், செயல்களாகவும் முரண்பட்ட நெருக்கீடுகளில் சிக்கித் தவிப்பதைக் காண்கிறோம்.

## உளவியல்

இவை சிறுவர், இளையோர், பெரியோர் என்ற வேறுபாடுகளைக் கடந்து யாவருக்கும் பொருந்தக் கூடிய செயல்களே. இதனால் தமது சூழல், குடும்பம், சமூகமும் சிக்கித் தவிக்கும் நெருக்கீடுகளில் மூழ்கி விடுகின்றது.

தம்மைப் பற்றி தாம் அறியாத போது தன்னை யாரோ ஒருவரின் சாயலாகவே உருவாக்க முனைவதால் தம் எதிரே காணும் பாத்திரங்களின் பிரதிகளாக்க முனையும் போது சூழலில் வசிப்போர், சினிமாவில் காண்போர் T.V.யில் வரும் பாத்திரங்களாக மாற முனைவதாலே தான் வன்செயல், வக்கிர உணர்வு, வல்லுறவு, போதைக் கதாநாயகர்களாவும், போலி தலைவர்களாகவும், சுரண்டி வாழும் ரௌடிகளாகவும் தம்மை மாற்றிக் கொள்கிறார்கள். இவர்கள் தமக்கான முடிவுகளை தாம் மேற்கொள்வதில் தயக்கம் காட்டுவதால் இவர்களை தவறான வழிகளில் ஈடுபட வைப்பது, பிறரின் கைப்பொம்மையாவது சுலபமாகி விடுகிறது. இதன் விளைவுகள் நாட்டின் அமைதியற்ற சூழலைக் கூட உருவாக்கிவிடும். ஆதலால் தனி மனிதனின் தன்னை அறியும் தன்மை அற்றுப் போதல் நாட்டின் சமூகச் சீர்கேட்டிற்கே வழியாகிவிடும். இவை நான் நானாக இராது தனித்துவ அடையாளத்தைத் தொலைத்து பிறரின் கைப்பொம்மையாகி தன்னை அழித்து விடுவதைக் காணலாம்.

'நீ எச்சரிக்கையாக இருக்க வேண்டியது வேறு எவரையும் பற்றி அல்ல. உன்னைப் பற்றித்தான். நம் பகைவர்களில் மிகக் கொடியவர்கள் நம்மகத்தே தான் உள்ளனர்' என்பார் சார்ல்ஸ் எச். ஸ்பர்ஜன்.

எம் முன்னே இருக்கும் தீய சக்திகளைக் களையாது நல்ல செயல்களை உணரவோ, ஏற்கவோ, செயல்படவோ, அமைதியுடன் வாழவோ போராட வேண்டியுள்ளதற்கு எமக்குள் இருப்பதை நாம் இனம் காணத் தவறுவதே காரணம்.

எம்முள் எம்மைத் தேடுவதற்கு சற்று தனிமை,தியானம், உள ஆற்றுப்படுத்தல், தன்னடக்கம் மிக அவசிய மாகின்றது. இவற்றுக்கானதை தேட பயணங்களோ, பணங்களோ,நிவாரண உதவிகளோ தேவையில்லை. உன் அமைதிக்கான சூழலை உருவாக்கிக் கொள்ள, உன்னுள் அமைதி கண்டு சுய தேடலை தொடங்குதலே முதற் படியாகும்.

எமக்குள் தேடல் என்பது ஒரு நாளில் ஒரு கணத்தில் வந்து விடாது. மனப்பக்குவ பயிற்சிகள் மூலம் உன்னுள் நீயாக உளம் மாறும் போது உன்னை நீ ஆள முடியும். உன் சிறப்புக்களை அடையாளம் காண முடியும் உன் மனம், உடல், ஆன்மாவின் அமைதியில் உன்னிடமுள்ள அதிவிஷேட சக்தி வெளிப்படும். இவை உனக்கு மட்டுமல்ல உன் சூழலில் உள்ளோருக்கும் வழிகாட்டும், வசப்படுத்தும், வாழ்வின் அர்த்தங்களை வெளிப்படுத்தும்.

**செ.யோசப்பாலா**

'உன்னகத்தே நோக்கு, நன்மையாயின் ஊற்று அகத்தே உள்ளது. நீ தோண்டினால் போதும் அது எப்பொழுதும் கொப்பளித்துக் கொண்டு வரும்' என மார்க்கஸ் ஆரோலிஸ் என்பரின் கூற்றின் அர்த்தம் புரியும்.

## கருத்தரங்கு

சுன்னாகம் சால்ட் சொசையிற்றி நிறுவனத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி (ஞாயிறு) காலை 10 மணியளவில் நிறுவனத்தின் பிரதான மண்டபத்தில் "இலங்கையில் உள்ள ஓவியக்கலை" என்ற தொனிப் பொருளில் க.பொ.த. (சாதாரணம்) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான கருத்தரங்கு ஆசிரியர் பொன்னுத்துரை விஜயகுமார் (யா/ அருணோதயக் கல்லூரி) தலைமையில் நடைபெறவுள்ளது. (அ)

## போயா ஆன்மீக நிகழ்ச்சிகள்

யாழ்.பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் 24 ஆம் திகதி சனிக்கிழமை போயா ஆன்மீக நிகழ்ச்சிகள் அதிகாலை 5 மணிக்கு நகர சங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகி நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவுபெறும். (அ)

## நூலகமும் தகவல் விஞ்ஞானமும்

இலங்கை நூலகச் சங்கத்தினால் நடத்தப்படும் நூலகமும் தகவல் விஞ்ஞானமும் கற்கை நெறி தரம் 1 கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக யாழ். பல்கலைக் கழக சிரேஷ்ட உதவி நூலகரும் இலங்கை நூலகச் சங்க யாழ். நிலைய ஒருங்கிணைப்பாளருமான க.சந்திர சேகர் தெரிவித்துள்ளார். (அ)

## பரிசளிப்பு விழா

தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட கலை இலக்கியப் போட்டிகளின் பரிசில் பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா, நாளை வெள்ளிக்கிழமை மு.ப.9.30 மணிக்கு யாழ். வட இந்து மகளிர் கல்லூரியில், கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

விழாவில் யாழ். மாவட்ட செயலாளர் க.கணேஷ் பிரதம விருந்தினராகவும், மேலதிக மாவட்ட செயலாளர் ஆ.சிவசுவாமி, வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா, தேசிய வீடமைப்பு அதிகாரசபை பணிப்பாளர் எஸ்.மாசிலாமணி, பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆர். வரதீஸ்வரன், கரவெட்டிப் பிரதேச செயலாளர் எஸ். சத்தியசீலன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (6,19)

☼ ☼ ☼

வடமராட்சி கல்வி வலய பரிசளிப்பு விழா-2007 இன்று வியாழக்கிழமை பி.ப 1.00மணிக்கு யா/ வட இந்து மகளிர் கல்லூரியில், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

விழாவில் இலங்கை வங்கி, வடமாகாண உதவிப் பொதுமுகாமையாளர் பி.ஏ.அருமைநாயகம் பிரதம விருந்தினராகவும், பருத்தித்துறை இலங்கைவங்கி முகாமையாளர் கே.பி. ஆனந்த நடேசன், பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன், கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.(6)

# மாணவர்களின் மனிதநேய விழுமியங்களை பேணி வளர்ப்பதில் ஆசிரியர் எனும் பங்குதாரர்

(நேற்றைய தொடர்ச்சி)

- பள்ளி செயற்பாடுகளில் முடிந்த வரை சம வாய்ப்புக்களை வழங்குதல்.
- ஒப்பீடு செய்யாதிருத்தல்.
- அச்ச உணர்வினை தவிர்த்தல்.
- தற்சார்புச் செயற்பாடுகளை ஊக்குவித்தல்.
- அழகுணர்வு இயற்கையை நேசித்தல் போன்ற பண்புகளை ஆதரித்தல், வளர்த்தல்.
- ஆசிரியர் மாணவருடனான உறவினை மேலும் நம்பிக்கையுள்ளதாக்கல்.
- ஆசிரியர் -மாணவர்-பெற்றோரிடையே நல்லுறவை ஏற்படுத்தல்.

ஆயின் இன்று ஆசிரியர்கள் இத்தகைய நுட்பங்களில் அக்கறை காண்பிப்பதில்லை. அல்லது அக்கறை செலுத்துவதற்கான கால அவகாசம் அவர்களுக்கு கிடைப்பதில்லை என்பதும் உண்மையே. ஏனெனில் இன்றைய கல்வி முறைக் கோலம் அவ்வாறு உள்ளது.

### இன்றைய கல்வி முறை

இன்றைய கல்வி முறை பற்றிய சில கருத்துக்களை நோக்குவோம் 'கல்வியானது சமுதாயத்திற்குரிய தன் கடமையுணர்வு என்ன என்பதனை மாணவர்களுக்கு புகட்டுவதில்லை. இதன் விளைவு என்னவென்றால் மாணவப் பருவத்தில் நலிந்தோரிடமும் வறியோரிடமும் இரக்கம் காட்ட வேண்டும் என்பதனை அறி யாத ஒருவகையான போலி பெருமிதத்தை பெற்று தம்மைச் சுற்றுச் சூழலில் உண்மையிலிருந்து விலக்கிக் கொள்ளும் தன்மையினையும் அளிக்கின்றது என்று குற்றச்சாட்டு உள்ளது.

எமது நாட்டைப் பொறுத்த வரையில் இன்று பரீட்சை, சான்றிதழ் போன்றன கல்வியை ஆக்கிரமித்துள்ளனவே ஒழிய கல்வியின் உயர் இலட்சியங்களும் நோக்கங்களும் பெருமளவில் மறைந்து போக தொடங்கியுள்ளன என்பதும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இன்று பள்ளிகளில் பல்வேறு பாடங்க ளும் இதர இணைப் பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. அவை கற்பிக்கப்படுவதற்கான நோக்கங்கள் பற்றி கலைத்திட்டத்தில் அழகழகாய் கூறப்பட்டாலும் நடைமுறையில் தேர்வு நோக்கி முன்னிலைப் படுத்தப்படுகின்றன.

மேலும் சில பள்ளிகள் மாணவர்களிடையே மிகுந்த கட்டுப்பாட்டை வற்புறுத்துகின்றன. திணிக்கப்பட்ட கட்டுப்பாடுகள், பாடச்சுமைகள் தேர்வையும் வெற்றியையும் மட்டும் மைய மாகக் கொண்ட கற்பித்தல்-கற்றல் செயற்பாடுகள் இவை யாவும் மனிதநேய பண்புகளை மாணவர்களிடம் வளர விடாது தடுக்கின்றன.

இதுமட்டுமல்ல மறுபக்கமாக போட்டி, பொறாமை, பகை, ஒப்பிடல்போன்ற விரும்பத்தகாத பண்புகளையும் வளர்த்து விடுகின்றன, அதனால் ஆசிரியர்களும் தேர்வு, வெற்றி என்ற இலக்குகளை நோக்கியேநகர்த்தப்படுகின்றார்கள். பாடங்களும் இதர இணைப் பாடச் செயற்பாடுகளும் வெறுமனே புள்ளிகளையும் வெற்றிகளையும் பெற்றுக் கொடுக்கும் விடயங்கள் அல்ல.

கல்வி என்பது வெறுமனே தகவல்கள், தரவுகளை மட்டும் பெற்றுக்கொள்ளும் செயற்பாடல்ல. கல்விக்கூடாக ஏற்கனவே கூறப்பட்ட மனிதநேய பண்புகள் வளர்க்கப்பட வேண்டும்.

### உண்மையான கல்வி

கல்வி என்றால் எவ்வாறிருக்க வேண்டும் எத்தகைய நோக்கங்களை நிறைவேற்ற வேண்டும் என்பது பற்றி இங்கு சிறிது நோக்கு வோம்.

மீண்டும் கல்வியலாளர் இராதா கிருஷ்ணனின் வார்த்தைகளைக் கோடிட்டுக் காட்டலாம் உன்னத மரபுகளையும் அன்பையும் இரக்கத்தையும் ஒருவரிடம் பேணி வளர்க்கவும் பொறுப்புணர்ச்சியுடன் கூடிய தான முழுமையான வாழ்க்கையை வாழ உதவு வதுமே கல்வி.

இந்திய சிந்தனையாளரும் கவிஞருமாகிய இரவீந்திரநாத் தாகூர் கல்விக்குத் தரும் விளக்கமானது 'ஒழுக்கம் ஆன்மீகம் மற்றும் அற நெறி விழுமியங்களின் ஒட்டு மொத்த முன்னேற்றம்' என்பதாக அமைந்தது இந்திய தேசபிதா காந்தியடிகளோ தன் மகனுக்கு எழுதிய கடிதத்தில் கல்வி பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

'என் அன்பார்ந்த மகனே.... உன் படிப்புப் பற்றிச் சரியான அக்கறை எடுத்துக்கொள்ளப்படவில்லை என்று சில சமயம் நீ குறைபட்டிருக்கக் கூடும்.... வெறும் எழுத்தறிவு மட்டும் கல்வியாகிவிடாது.

நன்நடத்தையை விருத்தி செய்து பொறுப்புணர்ச்சியுடன் நடக்க வழி காட்டுவது தான் உண்மையான கல்வி' இலங்கையின் கலைத் திட்டங்கள் கூட மனிதநேய விழுமியங்களை வலியுறுத்தத் தவறவில்லை.

### நற்பிரஜைகளை உருவாக்கும் ஆசிரியப் பணி

இன்று பள்ளி என்பது மாணவர்களைத் தேர்வுக்குத் தயா ரிக்கும் தொழிற்சாலையாக, அல்லது தொழிற் சந்தைக்குத் தயாராக்கும் நிறுவனமாக கருதப்பட ஆசிரியரும் தவிர்க்கப்பட முடியாதவாறு அந்நோக்கின் நிறை வேற்றத்திற்கான கருவியாகவே செயற்பட வேண்டியவரா கின்றார்.

மாறாக இது மனிதனை உருவாக்கும் இடமாக மாற்றப்படல் வேண்டும். ஒரு பிள்ளை அறிவு, திறனுடன் நல்ல மனப்பாங்கு கொண் டவனாக உருவாக வேண்டும்.

ஒரு பிள் ளையினுடைய அறிவு, திறன், விருத்தி மட்டும் நல்ல பிரஜையாக அவன் வளர, வாழ உதவாது. காந்தியடிகள் கூறியது போன்று 'நற்குணம் சேரா அறிவும், மனிதப் பண்பில்லா அறிவியலும் மகாபாவங்கள்' என்பதற் கொப்ப மனிதநேய விழுமியங்களை அவன் அறிதலும் ஏற்றுக்கொண்டு அதன் வழி ஒழுகுதலும் அவசியம்.

அவன் மனிதநேய விழுமியங்கள் கொண்டவனாக வளரும் போது தான் அவன் பெற்ற அறிவும், திறனும் அர்த்தமுள்ளதாக்கப் படுகின்றன.

பள்ளிகளில் ஆசிரியரூடாக மாணவர்களிடம் மனித நேய விழுமியங்கள் கொண்டெடுத்துச் செல்லப்படுதல் என்பது இலகுவானது, காத்திரமானது, அவசியமா னது. இதனால் ஆசிரியரே மனிதநேய விழுமியக் கையளிப்புக்கான முக்கிய பங்குதா ரராக முடியும்.

அதற்கு ஆசிரியர் மனிதநேய நம்பிக்கையும் பற்றும் உடையவராயிருத்தல் வேண்டும். ஒரு மனிதனால் மட்டுமே இன்னொரு மனிதனை உருவாக்க முடியும். தொடக்கம் சரியாக இருக்குமெனில் முடிவும் சரியாகவே இருக்கும்.

இன்று நவீன தொழில்நுட்ப சாதனங்களின் வளர்ச்சியால் ஆசிரியரில்லாமலே கற்கும் வாய்ப்புக்கள் அதிகமாகியுள்ளன. ஆயின் நவீன தொழில்நுட்பத்தால் செய்ய முடியாத மனிதநேய உறவாடலை சீரான வழி காட்டலை ஆசிரியராலேயே செய்ய முடியும் என்பதில் மாணவர் சமூகமும் புறச் சமூகமும் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டுள் ளன.

கற்பித்தற் செயற்பாடுகளில் ஆசிரியருக்கான பங்கு (Role) காலத்திற்கு ஏற்றவாறு வெவ்வேறாக மாற்றம் கண்டிருப்பது என்ன வோ உண்மைதான்.

ஆயினும் மாணவர் வழிகாட்டியாக, உள வியலாளனாக அவர் வகிக்கும் பங்கு இற்றை வரை மாறுபடவில்லை என்பதும் உண்மை யே நாட்டிற்கு நல்லதோர் எதிர் காலப் பிர ஜைகளை உருவாக்கிக் கொடுக்கும் பெரும் பணியை ஆசிரியர் களே ஆற்றிக் கொண்டிருக்கின் றார்கள்.

கலாநிதி (திருமதி) அனுஷ்யா சத்தியசீலன்
சிரேஷ்ட விரிவுரையாளர்
கல்வியியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்

அந்தவகையில் ஆசிரியர் தம் பொறுப்பினைஅதன் முக்கியத்துவத்தினை உணர்ந்து செயற்பட்டு மனிதநேயமிக்க இளம் தலை முறை யினரை எம் மண்ணுக்கு அளித்து எம் மண்ணை வளம்படுத்துவோம்.

(முற்றும்)



இலங்கை மெதடிஸ்த திருச்சபை சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு டயகோனி நிறுவனத்தின் அனுசரணையுடன் தும்பளையில் நிர்மாணித்த 10 வீடுகள் கையளிப்பு விழாவில் பருத்தித்துறை போதகர் அருட்திரு என். அருள்நாதன் தலைமை தாங்கி உரையாற்றுகிறார். பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன், அருட்திரு அழகராஜா அடிகளார் பிரமுகர்கள் அமர்ந்திருக்கின்றனர்.
(படம்:பருத்தித்துறை நிருபர்)

# பெனாசிரின் பேரணியில் வெடித்த குண்டு குழந்தையின் உடலில் கட்டப்பட்டிருந்ததா?

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் கடந்த அக்டோபர் மாதம் 18 ஆம் திகதி பெனாசிர் தன் தந்தை பூட்டோவின் நினைவிடத்துக்கு அஞ்சலி செலுத்துவதற்காக ஊர்வலமாக சென்றபோது, குண்டு வெடித்தது. இதில் 140 பேர் பலியானார்கள். இந்த சம்பவத்தில் கைக்குழந்தையின் உடலில் வெடிகுண்டை கட்டி, அதை வெடிக்கச் செய்த தன் மூலம் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியிருக்கலாம் என்று தெரிகிறது.


குழந்தையின் உடலில் வெடிகுண்டை கட்டி, அதை ஒருவன் தூக்கி வந்தான். அதை அவன் பெனாசிரிடம் கொடுக்க முயன்றான். அது முடியாத போது பெனாசிர் இருந்த குண்டு துளைக்காத வாகனத்தில் இருந்த மற்ற தலைவர்களில் யாராவது ஒருவரிடம் கொடுக்கவும் அவன் முயன்றான்.

குழந்தையுடன் அவனைப் பார்த்த பெனாசிர் தன் அருகே வருமாறு அவனை அழைத்தார். ஆனால் அவனது அசாதாரண நடவடிக்கையை பார்த்து சந்தேகம் கொண்ட பாதுகாப்பு அதிகாரிகள் அவனை பெனாசிரின் வாகனத்துக்கு அருகே செல்ல அனுமதிக்கவில்லை என்று ஒரு பொலிஸ்காரர் தெரிவித்தார்.

பெனாசிரை நெருங்க முடியாத அவன் தன் கையில் இருந்த குழந்தையின் உடலில் கட்டி இருந்த குண்டை கூட்டத்துக்குள் வெடிக்கச்செய்து இருக்க வேண்டும் என்று பொலிஸ் தரப்பில் கூறப்படுகிறது.

இந்தத் தகவலை நியூஸ் என்ற அந்த நாட்டு ஆங்கில பத்திரிகை வெளியிட்டுள்ளது. (அ)

# கிரகம் தாண்டிப் போனாலும் மனிதனைப் பிரச்சினை விடாது



எதிர்காலத்தில் மனிதன் நிலவில் குடியேறுவான் என்று பேசியும், எழுதியும் வருகிறோம். தண்ணீருக்குள் மூழ்கிச் செல்வதும், ஆகாயத்தில் பறப்பதும் ஒரே காலத்தில் கனவாக இருந்தவை தான்.

இன்று அவை ஆகாய விமானமாகவும், நீர்மூழ்கிகளாகவும் நனவாகி இருக்கின்றன. எதிர்காலத்தில் மனிதன் நிலவில் குடியேறுவது நடந்துவிட்டாலும் வேறு பல பிரச்சினைகள் தோன்றும் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

உதாரணமாக, நிலவில் ஒரு குழந்தை பிறந்தால் அதை எந்த நாட்டுக் குழந்தையாகக் கருதுவது? விண்வெளியில் 'பணியில்' இருக்கும் இரு விண்வெளி வீரர்கள் சண்டையில் ஈடுபட்டால், எந்த நாட்டுச் சட்டத்தின்படி அவர்களைத் தண்டிப்பது? நிலவில் சர்வதேச நிலையம் ஒன்றுக்கு ஒருவர் சேதம் ஏற்படுத்திவிட்டால் அவரிடம் எந்த நாடு நஷ்ட ஈடு வசூலிப்பது? விண்வெளியைப் பொறுத்தவரை தற்போது கைவசம் உள்ள இரண்டே சட்டங்கள். 1967 ஆம் ஆண்டு விண்வெளி ஒப்பந்தமும் 1979 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் நிலவு உடன்படிக்கையும் தான்.

இவை சட்ட ரீதியான விஷயங்களை விபரமாக விவரிக்கவில்லை. ஆக, எதிர்காலத்தில் நிலவிலும், செவ்வாய்க் கிரகத்தில் மனிதர்கள் குடியேறும்போது என்ன சட்ட அமைப்பை உருவாக்குவது என்று பொறுப்போடு விவாதித்திருக்கிறார்கள்- வியன்னாவில் சமீபத்தில் நடைபெற்ற மாநாட்டில், கிரகம் தாண்டிப் போனாலும் மனிதனைப் பிரச்சினை விடாது போலிருக்கே? (அ)

# அமெ.படையினருக்கு உதவ அளித்த நிதியை பாகிஸ்தான் இந்தியாவுக்கு எதிராக ஆயுதம் வாங்கப் பயன்படுத்தியது

(சிலிகொன்வேலி)

தீவிரவாதத்துக்கு எதிரான போருக்கு பயன்படுத்துவதற்காக அளிக்கப்பட்ட நிதியை பாகிஸ்தான் இந்தியாவுக்கு எதிராக ஆயுதங்கள் வாங்கப் பயன்படுத்தியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பாகிஸ்தானின் வடமேற்கு எல்லை மாகாணத்தில் தீவிரவாதிகளுக்கு எதிராக போராட 80 ஆயிரம் வீரர்களை அனுப்பிவைக்கவும், ஆப்கானிஸ்தானில் தலிபான்களுக்கு எதிராகப் போராடி வரும் அமெரிக்க படையினருக்கு உதவுவதற்காகவும் அமெரிக்கா, பாகிஸ்தானுக்கு 10 பில்லியன் டாலர் நிதியுதவி அளித்துள்ளது.

ஆனால் இந்த நிதியை பாகிஸ்தான் அரசு இந்தியாவுக்கு எதிராக உயர் தொழில்நுட்பத்திறன் கொண்ட ஆயுதங்களை வாங்கப் பயன்படுத்தியிருப்பதாக அமெரிக்காவின் சிஎஸ்ஐஎஸ் என்ற அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

பாகிஸ்தான் இராணுவம் இந்த தொகையைக் கொண்டு எப் 16 ரக போர் விமானம் உள்ளிட்ட நவீன ஆயுதங்களை வாங்கப் பயன்படுத்தியிருப்பதாக இந்த அமைப்பின் மூத்த ஆலோசகரான பிரெடரிக் பார்டன் கூறியுள்ளார்.

தீவிரவாதத்துக்கு எதிராக போராடுவதை விட இந்தியாவுடன் இராணுவ ரீதியாக மோதுவதிலேயே பாகிஸ்தான் கவனம் செலுத்தி வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

வானொலி ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில் பாகிஸ்தானுடனான உறவை அமெரிக்கா மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் பார்டன் கூறியுள்ளார். (அ)

# மியான்மார் ஜனநாயக தலைவர் சூ.கி. இராணுவ ஆட்சியாளரை சந்தித்துப் பேசினார்

(யாங்கோன்)

மியான்மார் நாட்டில் ஜனநாயக ஆட்சி கோரி போராடி வரும் தலைவர் சூ-கி இராணுவ ஆட்சியாளரை சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தினார்.

மியான்மார் நாட்டில் பல ஆண்டுகளாக இராணுவ தளபதிகள் ஆட்சி நடத்தி வருகிறார்கள். அந்த நாட்டில் இராணுவ ஆட்சியை மாற்றி ஜனநாயக ஆட்சி நடத்தவேண்டும் என்று பாடுபட்டு வருபவர் சூ-கி இவர் பெண்ணாக இருந்தாலும், துணிச்சலுடன் இராணுவ தளபதிகளை எதிர்த்துப் போராடி வருகிறார்.

அவரைக்கண்டு பயந்து போன இராணுவ ஆட்சியாளர்கள் அவரை வீட்டுக் காவலில் வைத்து இருந்தார்கள். கடந்த 12 ஆண்டுகளாக வீட்டுக்காவலில் இருந்து வரும் அவருக்கு ஆதரவாகவும், இராணுவ ஆட்சியை எதிர்த்தும் புத்தசாமியார்கள் வீதிக்கு வந்து போராடினார்கள். இந்த போராட்டத்தில் 15 பேர் பலியானார்கள்.

இந்த போராட்டத்துக்கு பிறகு சர்வதேச நாடுகள், சூ-கியுடன் பேச்சுவார்த்தை நடத்தி சமரச தீர்வு காணவேண்டும் என்று வலியுறுத்தின. இதனால் கீழே இறங்கி வந்த ஆட்சியாளர்கள் சூ-கியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு சம்மதித்தனர். இதற்காக தொழிலாளர் மந்திரி ஆங் -கியை நியமித்தனர். அவரை சூ-கி சந்தித்து பேசினார். மியான்மார் அரசு சார்பில் வாகனங்கள் சூ-கி வீட்டுக்கு சென்று அவரை அழைத்துக்கொண்டு இராணுவ அலுவலகத்துக்குச் சென்றது. அங்கு அவர் இராணுவ ஆட்சி நடத்தும் தளபதிகளில் ஒருவரை சந்தித்துப் பேசினார். என்ன பேசினார்கள் என்பது பற்றிய விபரங்கள் கிடைக்கவில்லை. (அ)

## உலக தரிசனம்

# மூளை திறனூக்கப் பயிற்சி

(லண்டன்)

நினைவு மறதியால் நாள் தோறும் பலர் அவதிப்பட்டு வருவதைக் காண்கிறோம். அவர்களுக்கு வரப்பிரசாதமாக நினைவுத் திறனை மேம்படுத்தும், சிறப்பு மூளை திறனூக்கப் பயிற்சியை லண்டன் ஆய்வு நிறுவனம் அறிமுகப்படுத்தி உள்ளது. சராசரியாக அவரவர் வயதிற்கேற்ப இயல்பான நினைவுத் திறன் இருக்கும்.

ஆனால் கவலை மற்றும் கோபத் தால் இயல்பான நினைவுத் திறனும் பலருக்கு குறைந்து இருப்பது ஆய்வில் தெரியவந்தது.

இதையடுத்து மறதிக் குணம் கொண்டோரைக் கண்டறிந்து, அவர்கள் வயது வாரியாக, குழுவாகப் பிரிக்கப்பட்டு, மூளை திறனூக்கப் பயிற்சி அளிக்கப்பட்டது.

இப் பயிற்சியைப் பெற்ற பின் னர் அவர்கள் அசாத்திய நினைவாற்றலுடன் விளங்குவது, பயிற்சிக்கு முந்தைய ஆய்வில் தெரியவந்தது. இந்த வகையான மூளை திறனூக்கப் பயிற்சிகள், நினைவுத் திறனை அதிகரிப்பதோடு, வாழ்க்கைத் தர வசதிகள் மேம்படவும் பல வழிகளில் உதவும் என ஆராய்ச்சி யாளர்கள் தெரிவித்தனர். (அ)

# 65 வயதில் சட்டப் படிப்பை முடித்து தமிழகப் பெண் சாதனை

(கும்பகோணம்)

கல்விக்கு வயது தடையில்லை என்பதை நிரூபிக்கும் வகையில் கும்பகோணத்தைச் சேர்ந்த பெண் தொழிலதிபர் லலிதா சேதுராமன் இரண்டு எம்.ஏ. பட்டங்களை முடித்து தற்போது 65 ஆவது வயதில் சட்டப் படிப்பையும் முடித்து சாதனை படைத்துள்ளார்.

உலக அளவில் கல்வெட்டு ஆராய்ச்சியில் வல்லுநரான ராமன் அன்ட்ராமன் நிர்வாக இயக்குநராக இருந்த என். சேதுராமனின் மனைவி லலிதா சேதுராமன்.

32 ஆண்டுகளாக கும்பகோணத்தில் ஈஷ்ஸ் பெண்கள் அறக் கட்டளை அமைப்பின் மூலமாக சமூகப் பணிகளைச் செய்து வரும் இவர் 360 இலவச திருமணம், கிராம வளர்ச்சி, பெண்கள் முன்னேற்றம், கல்வி உதவித் தொகை, விழிப்புணர்வு முகாம்கள், ஊனமுற்றோருக்கு உதவித் தொகை உள்ளிட்ட பல உதவிகளைச் செய்து வருபவர்.

மேலும், திம்மக்குடியில் அமைந்துள்ள விருந்தாலயம் எனும் முதியோர் இல்லத்தில் தற்போது அறங்காவலராக உள்ளார். அகில இந்திய கல்வெட்டு ஆராய்ச்சி நிறுவனத்தில் ஆயுள் உறுப்பினராக உள்ள இவர், பலமுறை அமெரிக்காவுக்குச் சென்று பாலோ ஆல்டோ என்ற இடத்திலும் கலிபோர்னியாவில் உள்ள லாங்பீச் என்ற இடத்தில் உள்ள பெண்கள் சங்கத்திலும் நம் நாட்டுப் பெண்களின் நிலைகளை எடுத்துச் சொல்லி விளக்கி வருகிறார்.

கனடாவில் இந்தியப் பெண்கள் சங்கத்திலும் உரையாற்றி வருகிறார். இவரின் சமூகப் பணிகளைப் பாராட்டி இவருக்குப் 'ஸ்திரிரத்னா' விருதை 1998 இல் சென்னையில் வழங்கி கே. சுப்ரமணியம் அறக்கட்டளை கௌரவித்துள்ளது.

சமூக சேவையோடு கல்வியின் மீது உள்ள ஆர்வத்தால் பட்டதாரியான இவர், தனது 60 வயதில் இரண்டு எம்.ஏ பட்டங்களைப் பெற்றுள்ளார். தற்போது 65 ஆவது வயதில் மதுரைப் பல்கலைக் கழகத்தில் பி.ஜி. எல். என்ற சட்டப் படிப் பை முடித்து அதற்கான பட்டத்தையும் பெற்றுள்ளார்.

தன்னுடைய விடாமுயற்சியும் மன உறுதியுமே நம்மை இந்த வயதிலும் பட்டம் பெற வைத்தது என்றார் லலிதா சேதுராமன். (அ)

# போதையில் கார் ஓட்டிய மைக் டைசனுக்கு தண்டனை

அமெரிக்காவைச் சேர்ந்த குத்துச் சண்டை வீரர் மைக் டைசன் 20 வயதில் சம்பியன் ஆகி 1986ஆம் ஆண்டு சாதனை படைத்தார். இவர் போதையில் கார் ஓட்டிய போது பிடிபட்டார். அவரது காரைப் பொலிஸார் சோதனை போட்டபோது போதைப் பொருள் இருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து நீதிமன்றில் அவர் மீது வழக்கு தொடரப்பட்டது. நீதிமன்றில் மைக்டைசன் குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

இதைத் தொடர்ந்து நீதிபதி ஹெலினே அப்ராமா, மைக் டைசனுக்கு ஒருநாள் ஜெயில் தண்டனையும், அபராதமும் விதித்தார். அதோடு, 360 மணிநேர சமுதாய சேவை செய்ய வேண்டும் என்றும் 3 ஆண்டுகள் நன்னடத்தை கண்காணிப்பில் இருக்கவேண்டும் என்றும் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது. (அ)

# கோடீஸ்வரர்களின் பெண் வாரிசுகளும் சாதனை பட்டியலில் முதல் இடம்பிடித்தார் வனிஷா

(நியூயோர்க்)



உலக கோடீஸ்வரர்களின் பெண் வாரிசுகளும், தத்தமது துறைகளில் முன்னணியில் உள்ளனர். முதல் 20 பெண் வாரிசுகளின் பட்டியலில் உலக கோடீஸ்வரரும், வெளிநாட்டு வாழ் இந்தியரான லட்சுமி மிட்டலின் மகள் வனிஷா மிட்டல் பாட்டியா முதல் இடத்தில் உள்ளார்.

போர்ப்ஸ் பத்திரிகை ஆண்டுதோறும் உலக கோடீஸ்வரர்கள் பட்டியலை வெளியிட்டு வருகிறது. இதில் இடம்பெற்றுள்ள கோடீஸ்வரர்களின் பெண் வாரிசுகள் பற்றி போர்ப்ஸ் காம் இணையத்தளம் ஒரு ஆய்வு நடத்தி, அதில் முன்னணியில் 20 பேரின் பட்டியலை வெளியிட்டுள்ளது.

உலக கோடீஸ்வரர்களின் மகள்கள் வெறும் அலங்கார பதுமைகளாக வலம் வருவதில்லை. தங்கள் திறமைகளை வெளிப்படுத்தும் வகையில் பல்வேறு துறைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். கடும் உழைப்பாளிகளாக உள்ளனர் என இந்த ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது. முதல் 20 பேர் பட்டியலில் இடம்பெற்றுள்ள பெண் வாரிசுகள் அனைவரும் 40 வயதுக்கு உட்பட்டவர்களே.

அவர்களில் முதல் இடத்தில் வருபவர் வனிஷா மிட்டல் பாட்டியா. இவர் உலக கோடீஸ்வரர் லட்சுமி மிட்டலின் மகள். தெற்கு ஆசியா குறித்த படிப்பில் முதுகலை பட்டம் பெற்றுள்ளார். மிட்டல் ஸ்டீல் நிறுவனத்தில் இயக்குநர் குழுவிலும் இடம் பெற்றுள்ளார். 2005 ஆம் ஆண்டு இவரது திருமணத்தை லட்சுமி மிட்டல் ரூ 240 கோடி செலவில் நடத்தி காட்டி அனைவரையும் வியப்படைய வைத்தார்.

பட்டியலில் இரண்டாவது இடத்தில் வருபவர் உலக கோடீஸ்வரர் பெர்னாட் அர்னால்டு என்பவரின் மக் டெல்பின் அர்னால்டு கான்சியா. இவரது தந்தை பெர்னாட் அர்னால்டு பிரபலமான ஆடம்பரப் பொருட்கள் விற்பனை நிறுவனத்தை எல்.வி. எம்.எச் ) நடத்தி வருகிறார். மகள் கான்சியா அந்த நிறுவனத்தின் இயக்குநர். பட்டியலில் மூன்றாவது இடத்தில் இருப்பவர் ஸ்பெயின் நாட்டு கோடீஸ்வரர் அமன்சியோ ஓர்டிகாவின் மகள் மார்டா ஓர்டிகா. இவர் 'ஜரா' என்ற துணிக்கடை நிறுவனத்தை நடத்தி வருகிறார். (அ)

# ஜப்பானில் வெளிநாட்டவர்கள் படம் எடுக்கப்படுவார்கள்

(டோக்கியோ)

ஜப்பான் நாட்டில் உள்ள அனைத்து வெளிநாட்டினரின் விரல் ரேகைகள் பதிவு செய்யப்படும். 16 வயதுக்கு மேற்பட்ட அனைத்து வெளிநாட்டினரும் போட்டோ எடுக்கப்படுவார்கள். ஜப்பானில் வெளிநாட்டினர் தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தடுப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக ஜப்பான் அறிவித்துள்ளது.

தூதரக அதிகாரிகள், அரசாங்க விருந்தாளிகள், பல தலைமுறையாக வசித்து வரும் வெளிநாட்டினர் ஆகியோருக்கு மட்டும் விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. ஈராக், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் அமெரிக்கா எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு ஜப்பான் ஆதரவு அளித்து வருவதால், தீவிரவாதிகள் தங்கள் மீது தாக்குதல் நடத்தலாம் என்று ஜப்பானியர்கள் அஞ்சுகிறார்கள். (அ)


# சர்வதேச கிரிக்கெற் போட்டிகளில் இருந்து ஓய்வுபெறுவதாக மார்வன் அத்தப்பத்து அறிவிப்பு

இலங்கை அணியின் முன்னாள் தலைவர் மார்வன் அத்தப்பத்து சர்வதேச கிரிக்கெற் போட்டிகளில் இருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்தார். அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடிய அத்தப்பத்து தனது முடிவை இலங்கை கிரிக்கெற் இடைக்கால சபைக்கு, கடிதம் மூலம் அறிவித்தார்.

இலங்கை அணி தேர்வுக் குழுவை கடுமையாக விமர்சித்த அத்தப்பத்து மீது இலங்கை கிரிக்கெற் இடைக்கால சபை ஒழுக்காற்று விசாரணை நடத்தவுள்ள நிலையிலேயே அவர் தனது ஓய்வை அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரராக செயல்பட்டுவந்த மார்வன் அத்தப்பத்து 90 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார். இதில் அவர் 16 சதங்களும் 17 அரைச்சதங்களும் அடங்கலாக 5502 ஓட்டங்களை குவித்துள்ளார். மார்வன் அத்தப்பத்து டெஸ்ட் போட்டிகளில் பெற்ற அதிகூடிய ஓட்டங்கள் 249 ஆகும்.

இது தவிர 268 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் விளையாடியுள்ள அத்தப்பத்து 11 சதங்களும் 50 அரைச் சதங்களும் அடங்கலாக 8529 ஓட்டங்களை குவித்துள்ளார். அவரது ஒருநாள் போட்டிகளின் ஓட்ட சராசரி 37.57 ஆகும். இது மட்டுமல்லாது சனத் ஜெயசூரியாவை தொடர்ந்து அத்தப்பத்து கடந்த 2003 ஆம் ஆண்டு தொடக்கம் மூன்றுவருடங்கள் இலங்கை அணியின் தலைவராகவும் செயல்பட்டுள்ளார்.




இதனிடையே ஓய்வை அறிவித்துள்ள அத்தப்பத்து இலங்கை கிரிக்கெற் இடைக்கால சபையினால் தடை விதிக்கப் பட்டுள்ள இந்தியன் கிரிக்கெற் லீக்கில் (ஐ.சி. எல்) விளையாட வுள்ளதாக அறிவிக் கப்பட்டுள்ளது. இந்தியன் கிரிக்கெற் லீக்கினால் அண்மையில் அறிவிக்கப்பட்ட அணி விபரத்தில் அத்தப்பத்துவின் பெயரும் இடம் பிடித்துள்ளது. இதில் அவர் டெல்லி ஜெட் அணிக்கு தலைவராக செயல்படவுள்ளார். இது மட்டுமல்லாது அத்தப்பத்து அவுஸ்திரேலிய பிராந்திய கிரிக்கெற் போட்டிகளிலும் விளையாட திட்டமிட்டுள்ளார். (அ)

# வாழ்நாளில் கிரிக்கெற் பார்க்கமாட்டேன்

## நடிகர் ஷாருக்கான் ஆவேசம்

(புதுடில்லி)

நடிகர் ஷாருக்கான் தீவிர கிரிக்கெற் ரசிகர். இந்திய அணி விளையாடும் முக்கிய போட்டிகளை அவர் நேரடியாக சென்று பார்ப்பது வழக்கம். தென் ஆபிரிக்காவில் 20 ஓவர் உலக கோப்பை போட்டி நடந்த போது இந்திய அணி விளையாடிய இறுதி போட்டியை நேரில் சென்று பார்த்தார்.



மும்பையில் இந்தியா - ஆவுஸ்ரேலியா இடையே நடந்த 20 ஓவர் போட்டியையும் சென்று பார்த்தார்.

கடந்த 19 ஆம் திகதி ஜெய்ப்பூரில் நடந்த இந்தியா- பாகிஸ்தான் கடைசி ஒரு நாள் போட்டியையும் பார்க்க வந்திருந்தார். அப்போது டி.விக்கள் பலமுறை அவரையே காட்டி கொண்டிருந்தன. ரசிகர்களும் கிரிக்கெற்றை பார்க்கும் ஆர்வத்தை போல ஷாருக்கானை பார்க்கவும் ஆர்வம் காட்டினர்.

அப்போது டி.வி வர்ணனையாளராக பணியாற்றி கொண்டிருந்த பாகிஸ்தான் முன்னாள் வீரா ரமீஸ்ராஜா, இந்திய கிரிக்கெற்சபை நிர்வாக செயலாளர் ரத்னாகர் ஷெட்டியிடம் பேட்டி கண்டார். பேச்சு ஷாருக்கான் கிரிக்கெற் பார்க்க வந்தது பற்றியும் ஷாருக்கானின் புதிய படமான "ஓம் சாந்தி ஓம்" பற்றியும் திரும்பியது. இதற்கு பதிலளித்த ரத்னாகர் ஷெட்டி ஷாருக்கான் நேரடியாக வந்து கிரிக்கெற் பார்ப்பது மூலம் தனது படத்தை பிரபலப்படுத்த முயற்சிக்கிறார் என்று கூறினார்.

இந்த விமர்சனம் ஷாருக்கானை கடுமையான கோபத்துக்கு ஆளாக்கி இருக்கிறது.

அவர் கூறியதாவது, எனக்கு விளையாட்டு மீது அதிக ஆர்வம் உண்டு. அதிலும் கிரிக்கெற் என்றால் மிகவும் பிடிக்கும். அதனால்தான் கிரிக்கெற் போட்டிகளை நேரடியாக பார்த்து வந்தேன். எனது படத்தை கிரிக்கெற் பார்த்துதான் மக்களிடம் பிரபலப்படுத்த வேண்டும் என்ற அவசியம் எனக்கு இல்லை. கடவுள் எனக்கு எல்லா செல்வங்களையும் கொடுத்து உள்ளார். நான் செல்வாக்குக்காக அலையவேண்டியது இல்லை.

நான் கிரிக்கெற் பார்ப்பதால் இப்படியெல்லாம் பிரச்சினை வரும் என்று நினைத்து

**விளையாட்டுச் செய்திகள்**

பார்க்கவில்லை.

இனி வாழ்நாளில் கிரிக்கெற் பார்க்க செல்ல மாட்டேன். எனது குழந்தைகள் டெண்டுல்கர், டோனி, கங்குலியின் தீவிர ரசிகர்கள். அவர்களை கூட நான் உடன் அழைத்து சென்று கிரிக்கெற் பார்க்க வைக்க விரும்பவில்லை. இவ்வாறு ஷாருக்கான் கூறினார்.

இது பற்றி கிரிக்கெற் சங்க துணை தலைவர் ராஜீவ் சுக்லா கூறும்போது, ஷாருக்கான் வருத்தம் அடைந்தது எங்களுக்கு வேதனை அளிக்கிறது. நடிகர்கள் கிரிக்கெற் பார்க்க வருவதற்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. அவர்கள் வருகையால் வீரர்களுக்கோ அல்லது ரசிகர்களுக்கோ பாதிப்பு இருப்பதாகவும் கருதவில்லை என்றார். (அ)



தேசிய மட்டத்தில் நடைபெற்ற தட்டெறிதல் போட்டியில் வெள்ளிப்பதக்கத்தை பெற்று சாதனை நிலைநாட்டிய ஹாட்லிக் கல்லூரி மாணவன் ஹரிகரனுக்கு மாணவர் ஒருவர் மலர் மாலை அணிவித்து கௌரவிப்பதையும் பெற்றோர் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்:- பரு. நிருபர்)

# ஆஸி. மண்ணில் இந்திய அணிக்கு கடும் சவால் காத்திருக்கிறது

## ரிக்கி பொண்டிங் தெரிவிப்பு

அவுஸ்திரேலிய மண்ணில் இந்திய அணிக்கு கடும் சவால் காத்திருப்பதாக அணித் தலைவர் பொண்டிங் தெரிவித்துள்ளார். இந்திய அணி வரும் டிசம்பரில் அவுஸ்திரேலிய சுற்றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட், முத்தரப்புத் தொடரில் பங்கேற்கவுள்ளது. இத் தொடர் குறித்து அவுஸ்திரேலிய அணித்தலைவர் பொண்டிங் அளித்த பேட்டி, அவுஸ்திரேலிய மண்ணில் இந்திய அணியின் தலைவராக செயல்படுபவர்கள்மிகுந்தநெருக்கடிக்கு ஆளாக நேரிடும் இதற்கு கும்ளேவும்.

விதிவிலக்கல்ல மிகச் சிறந்த வீரர்கள் இந்த நெருக்கடியை எதிர்கொள்ள முடியவில்லை. சச்சின் மீண்டும் அணித்தலை வர் பொறுப்பை ஏற்க விரும்பவில்லை. டிராவிட் குறைந்த காலத்துக்கு மட்டுமே இப் பதவியில் இருந்தார். ராஜினாமா செய்யும்போது இப் பதவி தனக்கு மகிழ்ச்சி அளிக்கவில்லை என தெரிவித்தார். இதனால் கும்ளேவுக்கு நெருக்கடி கட்டாயம் இருக்கும். எனினும் நாங்கள் சிறப்பாக ஆடினால் மட்டுமே இது பொருந்தும். முதல் போட்டியில் நன்றாக செயல்பட்டால் நிச்சயம் தொடரில் ஆதிக்கம் செலுத்த முடியும் இலங்கை அணியைவிட இந்திய அணி சற்று வலு வானது.

கடந்த முறை இங்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தபோது அபாரமாக செயல்பட்டனர். அப்போது அவுஸ்திரேலிய அணியும்



முன்னிலை யில் இருந்தது. சமீபத்தில் இங்கிலாந்தை அதன் சொந்த மண்ணில் வைத்து வீழ்த்தி யுள்ளனர். இந்த நம்பிக்கையுடன் எங்களை சந்திப்பர்.

(இலங்கை அணிபோல் துவக்கத்திலேயே இந்திய அணிக்கு சவால் அளிப்போம்) சச்சின், கங்குலி, டிராவிட் மற்றும் லட்சுமணை குறைத்து எடைபோட முடியாது. அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான போட்டிகளில் அதிக ஓட்டங்கள் குவித்துள்ளனர். இவ்வாறு பொண்டிங் தெரிவித்தார். (அ)

# டெஸ்ட் தொடரை வென்றது ஆஸி. சங்கக்காராவின் அபார ஆட்டம் வீணானது

இலங்கை அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலியா 96 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. 192 ஓட்டங்கள் குவித்து சிறப்பாக விளையாடிய இலங்கை வீரர் சங்கக்காராவின் ஆட்டம் வீணானது. இவ் வெற்றியின் மூலம் டெஸ்ட் தொடரை ஆஸ்திரேலியா 2-0என கைப்பற்றி அசத்தியது.



அவுஸ்திரேலியா சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடியது. பிரிஸ்பேனில் நடந்த முதல் டெஸ்டில் அவுஸ்திரேலியா வெற்றிபெற்றது. தொடர்ந்து இவ்விரு அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஹோபார்டில் நடந்தது. முதல் இன்னிங்ஸில் அவுஸ்திரேலியா 542, இலங்கை 246 ஓட்டங்கள் எடுத்தன.

இரண்டாவது இன்னிங்ஸை அவுஸ்திரேலியா 210 ஓட்டங்களுக்கு நிறுத்திக்கொண்டது. இதன் மூலம் இலங்கை அணிக்கு 507 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயிக்கப் பட்டது. இலக்கை விரட்டிய இலங்கை அணி நான்காவது நாள் ஆட்ட நேர முடிவில் 3 விக்கெற் இழப்புக்கு 247 ஓட்டங்கள் எடுத்திருந்தது. சங்கக்காரா (109), ஜெய சூர்யா (33) அவுட்டாகாமல் இருந்தனர்.

நேற்று முன்தினம் கடைசி நாள் ஆட்டம் நடந்தது. வேகப்பந்து வீச்சில் மிரட்டியது அவுஸ்திரேலியா. பிரட்லீயின் வேகத்தில் ஜெயசூர்யா 45 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார் அடுத்து களமிறங்கிய சில்வா (0), பிரசன்ன ஜெயவர்த்தன (0) இருவரும் ஜான்சன் பந்து வீச்சில் வந்த வேகத்தில் அரங்கு திரும்பினர். மகரூப் (4) மெக்கில் சுழலில் வீழ்ந்தார்.

**சங்கக்காரா அசத்தல்:** ஒரு புறம் விக்கெற்றுக்கள் விழுந்தாலும் மறுமுனையில் சிறப்பாக துடுப்பெடுத்தாடினார் சங்கக்காரா. அவுஸ்திரே லிய பந்துவீச்சை நாலாபுறமும் சிதறடித்த இவர் இரட்டை சதத்தை நெருங்கிய வேளையில், கிளார்க்கிடம் சரணடைந்தார். 27 பவுண்டரி 1 சிக்சருடன் தனி ஆளாக போராடிய சங்கக்காரா 192 ஓட்டங்கள் குவித்தார். இருப்பினும் மிடில் ஆர்டரில் ஏற்பட்ட விக்கெற் வீழ்ச்சியால் இலங்கையின் தோல்வியை தவிர்க்க முடியவில்லை. பின் வரிசையில் அதிரடியில் மிரட்டிய மலிங்கா 5 பவுண்டரி 3 சிக்சருடன் 42 ஓட்டங்கள் குவித்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.

மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் வெளியேற அனைத்து விக் கெற்றுக்களையும் இழந்த இலங்கை அணி 410 ஓட்டங்கள் எடுத்தது. இதன் மூலம் 96 ஓட்ட வித்தியாசத்தில் அவுஸ்திரேலியாவிடம் வீழ்ந்தது.

**தொடர் நாயகன் பிரட்லீ:** ஹோபார்ட் டெஸ்டின் இரண்டு இன்னிங்சிலும் சேர்த்து மொத்தம் 8 விக்கெற் கைப்பற்றிய பிரட்லீ ஆட்ட நாயகன் விருதை தட்டிச்சென்றார். தவிர இரண்டு டெஸ்டிலும் அசத்தியதன் மூலம் தொடர் நாயகன் விருதும் பிரட்லீ வசம் வந்தது.

டெஸ்ட் அரங்கில் அதிக விக்கெற் வீழ்த்திய அவுஸ்திரேலியாவின் ஷேன் வார்னின் (708 விக்) சாதனையை தகர்க்கும் எண்ணத்தில் சென்ற, இலங்கையின் முத்தையா முரளிதரன் இத்தொடரில் பெரும் ஏமாற்றம் அளித்தார். இவர் மொத்தம் 4 விக்கெற் மட்டுமே இத்தொடரில் கைப்பற்றினார். தற்போது 704 விக்கெற் வீழ்த்தியுள்ள முரளிதரனால் ஷேன் வார்னின் உலக சாதனையை அவுஸ்திரேலிய மண்ணில் தகர்க்க முடியாமல் ஏமாற்றம் தான்.

**சங்கக்காரவிடம் மன்னிப்பு கேட்டார் அம்பயர்:** தவறான தீர்ப்பு அளித்ததற்காக ரூடி குயர்ட்சன் மன்னிப்பு கோரினார். சங்கக்காரா 192 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது ஸ்டூவர்ட் கிளார்க் வீசிய பந்து இவரது தோள், பகுதி ஹெல்மெட்டை உரசிய படி ஸ்லிப் திசையில் நின்றிருந்த பொண்டிங்கிடம் தஞ்சம் புகுந்தது. இதையடுத்து அவுஸ்திரேலிய வீரர்களும் அப்பீல் செய்யவே குயர்ட்சன் ஆட்டமிழந்ததாக தீர்ப்பளித்தார். இம்முடிவு ஆட்டத்தின் முடிவை மாற்றியது. பின்னர் தனது தவறை உணர்ந்த குயர்ட்சன் சங்கக்காராவிடம் மன்னிப்பு கோரினார். (அ)

தன்னை வெட்டி வீழ்த்தியவனுக்கு நிழலையும்; வெட்டிய கோடரிக்கு மணத்தையும் தருகின்றன சந்தன மரங்கள்.

– எகிப்து

வலம்புரி

## மர நடுகைத் திட்டங்கள் யாழ்.குடாநாட்டில் முன்னெடுக்கப்படுமா?

யாழ்.குடாநாட்டில் யுத்தத்தின் தாக்கத்தினால் ஏற்பட்ட பாரிய அழிவுகளில் மரங்கள் தறிக்கப்பட்டமையும் முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

யாழ்.குடாநாட்டிற்கு வளம் பெருக்கி நின்ற பனை, தென்னை வளங்கள் அழிக்கப்பட்டமையின் விளைவை இன்று யாழ்ப்பாண மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர்.

தேங்காயின் விலையேற்றம் இதற்கு நல்லதோர் உதாரணமாகும். தென்மராட்சிப் பிரதேசத்தின் கண்டிவீதி நெடுகிலும் பனை, தென்னைகள் தறிக்கப்பட்ட காட்சி மனச்சாட்சியுள்ள எவரையும் நடுங்க வைக்கும். அந்தளவிற்கு பனை,தென்னைகள் தறிக்கப்பட்டுள்ளன.

இது தென்மராட்சியின் ஒரு பகுதியில் நாம் காணும் காட்சி. இதற்கு அப்பால் அந்தப் பிரதேசத்தின் உட்பகுதியில் நடந்திருக்கக் கூடிய அழிவுகள் இன்னும் ஏராளம்.

சுருங்கக் கூறின் யாழ்.குடாநாட்டில் உள்ள இராணுவ முகாம்கள், காவலரண்கள், பதுங்கு குழிகள், பாதுகாப்பு வேலிகள் என அனைத்தையும் யாழ்.குடாநாட்டில் நீண்டு, நிமிர்ந்து நின்ற பனை, தென்னைகளே உயிர் துறந்து தம் உடலால் நிரப்பிக் கொண்டிருக்கின்றன.

இதற்கு மேலாக முகமாலைப் பகுதியில் பீரங்கிகளுக்கும், பல்குழல் தாக்குதல்களுக்கும் தம் தலைகளை இழந்து நிற்கும் பனைகளும், தென்னைகளும் யாழ்ப்பாணத்தின் யுத்த அவலத்தை வெளிப்படுத்தும் அடையாளச் சின்னங்களாகும்.

ஒரு காலத்தில் இலங்கையை ஆட்சி செய்த ஒல்லாந்தர், நாட்டின் வடபுலத்தின் சின்னமாக பனை மரத்தை அடையாளப்படுத்தினர்.

அதன் காரணமாகவே இன்றும் யாழ்ப்பாணத்து அமைப்புக்கள் பனைமரத்தை தமது அமைப்பின் தலைச்சின்னமாக பொறித்துள்ளன. இருந்தும் கடந்த இருபது வருடகால யுத்தத்தில் யாழ். குடா நாட்டில் இலட்சக்கணக்கான பனை மரங்கள் தறித்து வீழ்த்தப்பட்டுள்ளன.

பனைகளின் விளைநிலமாக விளங்கும் தீவுப் பகுதியில் இன்னும் சில வருடங்களில் பனைவளம் முற்றாக அழிந்துவிடும் அபாயத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது. இதேநிலைதான் யாழ். குடா நாட்டின் ஏனைய மரங்களுக்கும் ஏற்பட்டுள்ளது. எனினும் அழிந்து போன மரங்களை ஈடுசெய்யும் வகையில் மரநடுகைகள் ஏதேனும் யாழ்.குடா நாட்டில் முன்னெடுக்கப்படுவதாக இல்லை.

ஆக, பிரதேச செயலகங்கள் மற்றும் பொது அமைப்புகளில் ஒரு சில மரங்கள் நாட்டப்படுவதும் அவை புகைப்படமாக்கப்படுவதும் பின்னர் ஊடகங்களில் அவற்றை காட்சிப்படுத்துவதுமான ‘கடமை நிகழ்வு’களே நடந்து கொண்டிருக்கின்றன.

இவை ஒருபோதும் அழிந்துபோன மரங்களை ஈடுசெய்வதற்கு போதுமானவை அல்ல. எனவே யாழ்.குடாநாட்டில் மரநடுகை பாரிய அளவில் முன்னெடுக்கப்படவேண்டும்.

இதற்காக திருகோணமலையில் இருக்கும் மாகாண அரச அமைப்புக்கள் நிதி ஒதுக்கீடு முதல் மரநடுகையை முன்னெடுப்பதற்கான திட்டங்கள் வரையான நடவடிக்கைகளைச் செய்தாக வேண்டும்.

தற்போதைய மழை காலத்தை நல்ல முறையில் பயன்படுத்தி மர நடுகைத் திட்டத்தை ஊரெங்கும் ஆரம்பிக்க உரிய அதிகாரிகள் விசுவாசமாக முன்வரட்டும்.

# தொண்டமானும், ஹக்கீமும் 14ஆம் திகதி தீர்க்கமான முடிபினை எடுப்பார்கள்

## தயாசிறி ஜயசேகர எம்.பி நம்பிக்கை

(கொழும்பு)

எம்.பி.க்களை அச்சுறுத்தியே வரவு செலவுத்திட்ட வாக்கெடுப்பில் அரசாங்கம் வெற்றி பெற்றுள்ளது. ஆட்சியினை கவிழ்ப்பதற்கான சக்தியினை தொண்டமானும் ஹக்கீமும் கொண்டுள்ளனர். எதிர்வரும் 14ஆம் திகதி தீர்க்கமான முடிபினை இவர்கள் இருவரும் எடுப்பர்கள் என்பதில் ஐயமில்லை என்றுஐ.தே.க.வின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர சபையில் தெரிவித்தார்.

ஆட்சியை கவிழ்க்கக் கூடியவர்களுக்கு அரசாங்கம் எலும் புத்துண்டை கொடுத்து வைத்திருக்கின்றது. இவர்கள் விரைவில் அரசாங்கத்துக்கு எதிராக திரும்புவார்கள் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நடைபெற்ற வரவு செலவுத்திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது,

வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாதவர்கள் வருகை தராதோர் எம்முடன் இணைந்திருந்தால் அரசாங்கத்தின் நிலை ஆட்டம் கண்டிருக்கும். வாக்களிக்காத இருவரும் தங்களது முடிபை டிசம்பர் மாதம் 14ஆம் திகதி மாற்றிச் சொல்வார்கள் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது. ஆட்சியை கவிழ்க்கக்கூடியவர்களுக்கு அரசாங்கம் எலும்பு துண்டை கொடுத்து வைத் திருக்கின்றது. அவர்களும் விரைவில் அரசாங்கத்திற்கு எதிராக திரும்புவார்கள்.

வரவு செலவுத்திட்டத்தினை வெற்றிகொள்ளும் நடவடிக்கையின் முதல்படியாக ஐ.தே.க. உறுப்பினர்களை அச்சுறுத்தினர். இதனை ஜனாதிபதி முதல் அமைச்சின் அதிகாரிகள்வரை செய்தனர். எம். பிக்களின் உரிமைகள் தொடர்பாக பேசப்படாமல் அச்சுறுத்தப்பட்டனர். பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப் செய்ததுபோல் மஹிந்த ரட்ணதிலக்க எம்.பியை கோல்பேஸ் ஹோட்டலில் சிறைப்பிடித்தனர். அதற்கு ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவினர் பாதுகாப்பு வழங்கினார். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களை புலிகளே சபைக்கு செல்ல வேண்டும் என்று கூறியதாக அமைச்சர்கள் தெரிவித்தனர்.

எம்.பிக்களை அச்சுறுத்தியே அரசாங்கம் வரவு செலவுத் திட்டத்தில் வெற்றியீட்டியது. தொண்டமானும் ஹக்கீமும் ஆட்சியை கவிழ்ப்பதற்கான சக்தியை கொண்டவர்கள். அவர்கள் இருவரும் டிசம்பர் 14 ஆம் திகதி தீர்க்கமான முடிபொன்றை எடுப்பர்.

இந்த அரசாங்கத்தில் எதிர்க் கட்சியிலிருந்து சென்றவர்களே பெரும்பான்மையினராக இருக்கின்றனர். அவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பண்டாரநாயக்க சிந்தனையையா பின்பற்றுகின்றனர்.

மகிந்த சிந்தனை அரசாங்கத்தினூடாக மக்களுக்கு எவ்விதமான பிரயோசனமும் இல்லை என்பதனால், மக்கள் உரிமையை வென்றெடுப்பதற்காக ஆட்சியை விரைவில் ஏற்படுத்துவோம். அது வெகுதொலைவில் இல்லை. (அ)

# ஜே.வி.பியினை ஓரம் கட்டிவிட்டோம்

## பிரதியமைச்சர் இராதாகிருஷ்ணன் பெருமிதம்

(கொழும்பு)

சிறுபான்மையினக் கட்சிகள் அரசாங்கத்திற்கு வரவு செலவுத்திட்டத்தில் ஆதரவளித்ததால் யுத்த முனைப்பு, தமிழ் மக்களுக்கு எதிரான கொள்கையுடைய ஜே.வி. பி. ஓரங்கட்டப்பட்டுள்ளது. எனவே எமது பிரச்சினையை தீர்ப்பதற்கு அரசாங்கத்தை மிதவாத வழிக்கு திருப்ப கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது என்று மலையக மக்கள் முன்னணியின் எம்.பியும் பிரதி அமைச்சருமான பெ.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இதுகுறித்து மேலும் அவர் தெரிவித்ததாவது,

சிறுபான்மையினக் கட்சிகள் ஆதரவாக வாக்களித்திருக்காவிட்டால் ஜே.வி.பி. அரசுக்கு ஆதரவு வழங்கி அரசாங்கத்தை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்திருக்கும். அது தமிழ் மக்களுக்கு ஆபத்தான தாகவே அமைந்திருக்கும்.

காரணம் அரசின் யுத்த முனைப்பு மேலும் அதிகரிக்கும். அத்தோடு தமிழ் மக்களுக்கு எதிராக கடும்போக்கும் முன்னெடுக்கப்படும். அன்று சந்திரிகாவை கட்டுப்பாட்டில் கொண்டு வந்து திண்டாட வைத்தது போல் ஜனாதிபதி மகிந்தவையையும் திண்டாட வைத்திருப்பார்கள்.

இன்று சிறுபான்மையின அரசியல் கட்சிகள் அரசாங்கத்தை ஆதரித்திருக்கின்றது. எனவே தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கு அரசாங்கம் கடமைப் பட்டுள்ளது. அதனை நாமும் வலியுறுத்துவோம்.

ஜே.வி.பி.வாக்களித்து வெற்றி பெற்றிருந்தால் யுத்த நிறுத்த புரிந் துணர்வு உடன்படிக்கையை இரத்துச் செய்ய வேண்டும். சர்வகட்சி பிரதிநிதிகள் குழு மாநாட்டை கலைக்க வேண்டும். சர்வதேச அழுத்தங்களுக்குஅடிபணியக் கூடாது. புலிகளுடன் பேச்சு நடத்தக் கூடாது போன்ற விடயங்களை வலியுறுத்தி தமிழர்களுக்கு எதிராக அரசாங்கத்தை கட்டுப்படுத்தியிருக்கும்.

எமது ஆதரவால் மேற்கண்ட நிலைமை தகர்க்கப்பட்டுள்ளது. எனவே யுத்தத்தை முடிபுக்கு கொண்டு வந்து தமிழ்மக்களின் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கு அரசாங்கம் முயற்சிக்க வேண்டியநிலை உருவாகியுள்ளது. (அ)

# வரவு -செலவுத் திட்டத்தினை எதிர்த்த ஜே.வி.பி.மீது அரசாங்கம் புலி முத்திரை குத்தியுள்ளது - ஐ.தே.க.

வரவு – செலவுத் திட்டத்தினை எதிர்த்த ஜே.வி.பி மீதும் அரசாங்கம் புலி முத்திரை குத்தியுள்ளது. ஊசலாடிக் கொண்டிருக்கின்ற அரசாங்கம் எப்போது விழும் என்பது எவருக்கும் தெரியாது என்று ஐ.தே. கட்சி யின் பேச்சாளரும் எம்.பி.யுமான கயந்த கருணாதிலக தெரிவித்தார். வரவு– செலவு திட்டத்தை தோல்வியடையச் செய்யும் யானை –புலி கூட்டு தோல்வியடைந்துள்ளதாக அரசாங்கம் சுவரெட்டிகளை ஒட்டியதன் மூலம் திட்டத்தினை எதிர்த்த ஜே.வி. பி. மீதும் புலிச் சாயம் பூசப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் கூறினார்.

எதிர்க் கட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கையிலேயே கயந்த கருணாதிலக எம்.பி. இவ்வாறு தெரிவித்தார். இங்கு அவர் மேலும் கூறியதாவது,

அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தை எதிர்க்கட்சிகள் அனைத்தும் கூட்டாக எதிர்த்துள்ளன.

எனவே அரசு வெற்றி பெறவில்லை என்பதுதான் உண்மையாகும். எம்.பிமாரை அச்சுறுத்தி நெருக்கடிகளைக் கொடுத்து அத்தோடு பணம், சிறப்புரிமைகளை வழங்கியே இவ்வெற்றியினை அரசாங்கம் பெற்றுள்ளது. மக்கள் பிரதிநிதிகள் சிலர் மக்களுக்காக தீர்மானத்தை மேற்கொள்ளாது பணத்துக்காகவும் சிறப்புரிமைகளுக்காகவும் வாக்களித்துள்ளனர். மகிந்த சிந்தனையை எழுதி ஆட்சியை உருவாக்கியவர்களே இதனை எதிர்த்துள்ளனர்.

அத்தோடு ஜனாதிபதியை பதவிக்கு கொண்டுவர அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர்களும் வரவு செலவுத்திட்டத்தை எதிர்த்துள்ளனர். கோடிக்கணக்கான பணத்தை செலவழித்து அரசாங்கத்தால் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. அதில் யானை–புலி கூட்டணி தோல்வி கண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்படியானால் ஜே.வி.பி மீதும் அரசு இன்று புலி முத்திரையை குத்தியுள்ளது. ஏனென்றால் அவர்களும் வரவு செலவுத் திட்டத்திற்கு எதிராகவே வாக்களித்தனர்.

இது மக்களின் வெற்றியல்ல; இது மக்களுக்கான அச்சுறுத்தலாகும்; பணம் கொடுத்து பெற்றவெற்றியாகும். இதன் மூலம் ராஜபக்ஷ கம்பனியே வெற்றி பெற்றுள்ளது.


எனவே வரவு செலவுத்திட்டத்தின் மூன்றாம் கட்ட வாசிப்பு மீதான வாக்கெடுப்பின் போது மக்கள் பிரதிநிதிகள் மனச் சாட்சியுடன் வாக்களிக்க வேண்டும்.

எதிர்க்கட்சிகளெல்லாம் ஒரு நிலைப்பாட்டுக்கு வந்துள்ளன. இது அரசாங்கத்தின் பலவீனத்தையே வெளிக்காட்டியுள்ளது. ஊசலாடிக்கொண்டிருக்கும் அரசு எப்போது விழும் என்பது தெரியாது.

மக்கள் மீதான சுமைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் உயர்ந்துள்ளன. தெற்காசியாவிலேயே அதிகளவில் இலங்கையிலேயே 22 வீதம் பணவீக்கம் உருவாகியுள்ளது.

இவற்றையெல்லாம் கருத்தில் கொள்ளாது புஷ்வாணத்தை போன்ற வரவு செலவுத்திட்டத்தை முன்வைத்து அதனை மறைப்பதற்கு பிரபாகரனின் பெயரை அரசாங்கம் பயன்படுத்துகிறது என்றார். (அ)

## நீதியும் நேர்மையுமே வாழ்க்கைக்கு பிரதானமானவை



தெய்வத்தின் அருளைப்பெற எத்தனையோ விதமான ஆன்மீக சாதனைகளைச் செய்கிறீர்கள். எத்தனை விதமான சாதனைகள் செய்தாலும் சித்தி-சுத்தி என்கிற இதயத் தூய்மை இல்லை எனில் அனைத்தும் வீண்! ஆகையால் முதலில் இதயம் தூய்மையாக நாமஸ்மரனை செய்வது அவசியம். இந்த நாமஸ்மரனை செய்வது அவசியம். இந்த நாமஸ் மரனை இதயபூர்வமாக செய்யவேண்டும்.

பூமியில் நீரின் அளவு குறைந்து கொண்டே வருகிறது. காரணம் என்ன? மனித மனங்களில் நீதியும், நேர்மையும் குறையக் குறைய பூமியின் அகத்தும் நீரின் அளவு குறைந்து கொண்டே வருகிறது. மனித வாழ்க்கைக்கு நீதியும், நேர்மையுமே பிரதானமானவை. இந்த நீதி மனித மனங்களிலேயே மலருகின்றது. அதை மனிதன் மறக்கும் போதுதான் பூமியினடியில் நீரும் குறைகிறது.

## சண்டே...

திருந்தது.

அரசாங்கத் தரப்புக்கும் மற்றும் கருணா குழுவுக்கும் இடையிலான உறவுகள் மற்றும் கருணாவை வெளியேற்றுவதற்கு மகிந்த அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகள் ஆகியன அரசாங்கத்திற்குப் பெரும் சங்கடமான நிலைமையை தோற்றுவித்திருந்தது. இந் நிலையிலேயே தமது அலுவலகம் எரிக்கப்பட்டுள்ளதாக அந்நிறுவனப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து லீடர் பப்ளிகேசன் நிறுவனப் பணிப்பாளர் லால் விக்ரமதுங்க தெரிவித்துள்ளதாவது, த மோர்னிங் லீடர் வார ஏட்டின் நகரப் பதிப்புக்குரிய இறுதிக் கட்டப் பணிகள் நேற்று அதிகாலை நடைபெற்றுக் கொண்டிந்த போது இரண்டு வாகனங்களில் வந்த முகமூடியணிந்த 12 பேர் திடீரென அலுவலகத்திற்குள் நுழைந்தனர். அப்போது அங்கு ஊடகவியலாளர்களும் அச்சு இயந்திரப் பணியாளர்களும் இருந்தனர்.

தமிழிலும் சிங்களத்திலும் சரளமாகப் பேசிய ஆயுததாரிகள் எமது பணியாளர்களைத் தாக்கியதுடன் அவர்களிடம் இருந்த தொலைத் தொடர்பு சாதனங்களையும் பறித்தெடுத்தனர். அலுவலகத் தொடர்பு சாதனங்களையும் பயன்படுத்தத் தடையாக இருந்தனர்.

அதன் பின்னர் பெற்றோல் குண்டுகளை வீசினர். அப்போது எமது களஞ்சிய அறை தீப்பற்றியது. தொடர்ந்து அச்சு இயந்திரப் பகுதி மற்றும் அலுவலகத்தின் பிரதான பகுதியிலும் பெற்றோல் குண்டுகளை வீசினர்.

இதனால் அப்பகுதி தீப்பற்றியது. பத்திரிகை அச்சிடுவதற்குரிய இரண்டு ரீல்களில் இருந்த தாள்கள் எரிந்து நாசமாகின. மேலும் அச்சு இயந்திரங்கள் இரண்டு முற்றாக எரிந்து நாசமாகின. முக்கியமான ஆவணங்களும் அலுவலகக் கோப்புக்களும் எரிக்கப்பட்டுள்ளன.

எமது அலுவலகம் அமைந்துள்ள இடம் உயர் பாதுகாப்பு வலயமாகும். இரத்மலானை விமான நிலையத்தை அண்மித்து எமது அலுவலகம் அமைந்துள்ளது. இப்பகுதியில் ஆயுதக் குழுவினர் நடமாடுவது என்பது படையினரின் உதவியின்றி நடந்திருக்க முடியாது என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம். எமது நிலைப்பாடும் அதுதான்.

எனவே தாக்குதல் நடத்தியோர் பாதுகாப்பு வலயத்தையும் மீறி எப்படி எமது அலுவலகத்திற்குள் வந்தனர்? தாக்குதல் நடத்தி விட்டு எப்படித் திரும்பினர்? படையினரின் உதவியின்றி அவர்கள் வந்திருக்கலாம் என்று கருத முடியுமா?

எனவே யார் இந்தச் சம்பவத்தின் பின்னணியில் உள்ளனர் என்பது வெளிச்சமாகியிருக்கின்றது. எனவே இது ஒரு திட்டமிட்ட செயலாகும். எமது நிறுவனம் தாக்கப்படுவது இது முதல் முறையல்ல. இதற்கு முன்னரும் எமது நிறுவனத்தின் வெளியீடான இருதின பத்திரிகையை எரித்து நாசமாக்கினர் என்றார் அவர். (எ)

## அமெரிக்கத் தூதுவர் றொபேட்டுடன்...

இதனைத் தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவை தொலைபேசியில் தொடர்பு கொண்ட றொபேட் ஓ பிளேக் இந்த முறைப்பாடு தொடர்பாகத் தெரிவித்துள்ளதுடன் நிலைமையைக் கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் கேட்டிருந்தார்.

ஆனால் இதனை கோத்தபாய ராஜபக்ஷ கருத்தில் எடுக்காது, அமெரிக்கத் தூதுவரை அவமதித்திருக்கின்றார். அதேசமயம் அமெரிக்கத் தூதுவர் றொபேட் ஓ பிளேக்,

நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதாகவும் கோத்தபாய ராஜபக்ஷவுக்கான தொலைபேசி அழைப்பை அவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இருந்தே மேற்கொண்டதாகவும் மகிந்த ராஜபக்ஷவுக்குக் கூறப்பட்டது.

இதனைக் கேட்டு ஆத்திரமடைந்த மகிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம மற்றும் மேலும் ஒரு அமைச்சரையும் அழைத்து நாட்டின் உள் விவகார அரசியலில் தலையிடாது இருக்குமாறு றொபேட் ஓ பிளேக்கிடம் கூறுமாறு கேட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து திங்கட்கிழமை காலை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித ஹோகன்ன, றொபேட் ஓ பிளேக்கை அவசரமாக அழைத்தபோதும் சுமுகமாகவே உரையாடியுள்ளார்.

தற்போதைய நாட்டு நிலைமைகள் தொடர்பாக மிக நீண்ட நேரம் நடைபெற்ற இந்தப் பேச்சுக்கள் மிகவும் சுமுகமாக நடைபெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சொத்துக்களை அமெரிக்க அரசாங்கம் முடக்கியுள்ள நிலையில் இந்த விடயத்தை பெரிதுபடுத்த வேண்டாமென்று அரசாங்கம் எண்ணியுள்ளதாகவே பின்னர் தெரியவந்துள்ளது.

எனினும் கடத்தப்பட்டவர் விடுவிக்கப்பட்டிருந்தார். அதேநேரத்தில் றொபேட் ஓ பிளேக், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க மற்றும் சிலருடன் இரவு உணவை அருந்திக் கொண்டிருந்தார்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரின் உறவினர் விடுவிக்கப்பட்டது தொடர்பான தகவலை அறிந்த ரணில் விக்கிரமசிங்க, றொபேட் ஓ பிளேக்கைத் தொடர்பு கொண்டு அதனை தெரிவித்துள்ளார்.

இதனிடையே அமெரிக்கத் தூதுவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தேநீர் விருந்தில் கலந்து கொண்டது சாதாரணமான ஒரு நிகழ்வு என்றும் அதேசமயம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உள்ளிட்ட பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொலைபேசி அழைப்புக்களை மேற்கொண்டது தற்செயலானது என்றும் ஐ.தே.க. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனை அரசாங்கம் தவறாகப் புரிந்து கொண்டுள்ளதுடன் அது தொடர்பாக தேவையற்ற கவலைகளைக் கொண்டுள்ளதாகவும் அவை மேலும் தெரிவித்துள்ளன. ஆனால் அமெரிக்கத் தூதுவர் றொபேட் ஓ பிளேக், ரணில் விக்கிரமசிங்கவுடன் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவை மிக நீண்ட நேரம் செலவிட்டதாகவும் றொபேட் ஓ பிளேக்கின் நடவடிக்கைகள் சந்தேகத்திற்கிடமாக இருந்ததாகவும் அரசாங்கத் தரப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (எ)

## மனித உரிமை அமைப்பின்...

அரசாங்கம் வேண்டுகோள் விடுக்கவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் மனித உரிமை மீறல் விடயங்களுக்கு குறித்த விசாரணைகளை மேற்கோள் காட்டி உரை நிகழ்த்திய அவர் மேலும் தெரிவித்ததாவது,

பாரதூரமான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு தொடர்பான உயர் நீதிமன்ற திருத்தங்களும் ஆலோசனைகளும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். அவை சபாநாயகருக்கு உயர் நீதிமன்றத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வரவு-செலவுத் திட்ட விவாதத்திற்கு முன்பாக இதனைச் சபையில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனாலும் அவ்வாறு சமர்ப்பிக்கப்படுவது தாமதமாகி விட்டது. எதிர் வரும் ஜனவரி மாதம் இதனைச் சமர்ப்பிப்போம். அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டு சபையின் அங்கீகாரத்துடன் மேற்படி ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு செயற்படும்.

அதன் மூலம் மனித உரிமை மீறல்கள் குறித்த விசாரணைகளுக்கு நடவடிக்கை எடுக்கப்படும். இதன்போது சட்ட நிபுணர்களின் மேற்பார்வையில் ஆலோசனைகளும் பெறப்படும்.

அரசியலமைப்பின் 17 -வது விதப்புரைக்கமைவாக ஜனாதிபதி ஆணைக்குழு அமையவுள்ளது என்றார். (ச)

## முள்ளிக்...

யுள்ளனர் என்று 'புலிகளின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வவுனியா தெற்கு முள்ளிக்குளம் பகுதியில் நேற்று விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையே இடம்பெற்ற மோதலில் 4 விடுதலைப் புலி உறுப்பினர்கள் உயிரிழந்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

வவுனியா முள்ளிக்குளம் தெற்கு கட்டபெருமான் குளம் பகுதியில் இடம்பெற்ற இம் மோதல் புலிகளின் பதுங்கு குழியொன்று அழிக்கப்பட்டுள்ளதாகவும் இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் பாதுகாப்பு படையினர், விடுதலைப் புலிகளின் 4 சடலங்களையும் ரி-56 ரகத் துப்பாக்கிகள் நான்கினையும் மீட்டுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சகம் மேலும் தெரிவித்துள்ளது.

இம்மோதலில் பாதுகாப்பு படையினருக்கு எதுவித சேதமும் ஏற்படவில்லை என பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. (ச)

## மகிந்த...

பேற்றமை குறித்து மகிந்த ரட்ண திலக்க தெரிவிக்கையில்,

நான் அரசாங்கத்துடன் இணைந்து கொண்டதற்குப்பிரதியுபகாரமாக ஜனாதிபதி எனக்கு இந்த அமைச்சுப் பதவியை வழங்கியுள்ளார். மக்களுக்குச் சேவை செய்யக் கூடிய நல்லதொரு சந்தர்ப்பத்தையே அவர் எனக்குத் தந்திருக்கின்றார். இந்த சந்தர்ப்பத்தை நான் முறையாகப்பயன்படுத்துவேன் என்றார்.

மகிந்த ரட்ணதிலக்கவிற்கு அமைச்சுப் பதவி வழங்கப்பட்டிருப்பதன் மூலம் அமைச்சரவை எண்ணிக்கை 108 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)

## அரசாங்கத்தின் அனுமதி...

இரத்மலானையிலுள்ள சண்டே லீடர், இருதின பத்திரிகை நிறுவனம் தீ வைக்கப்பட்டமை தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள கண்டன அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்திலேயே இப்பத்திரிகை நிறுவனம் அமைந்துள்ளது. விமானப் படையினரின் சோதனைச் சாவடி முகாம்கள், சேர் ஜோன் கொத்தலாவல இராணுவ பயிற்சிப் பல்கலைக்கழகம், இரத்மலானை விமான நிலையமும் இப்பிரதேசத்திலேயே உள்ளன.

எனவே அதிகாலை வேளையிலேயே இப்பிரதேசத்திற்கு அரசாங்கத்தினதும் பாதுகாப்பு அமைச்சினதும் அனுமதியின்றி பிரவேசிக்க முடியாது. எனவே மேற்கண்டவர்களின் அனுமதியுடனே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

உலகிலேயே அதிகமான ஊடகவியலாளர்கள் இலங்கையிலேயே கொலை செய்யப்பட்டுள்ளனர். அடக்கு முறைகளும் அதிகம். இத்தகவல்கள் ஐ.நா. சபைக்கும் அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலேயே ராஜபக்ஷ சகோதர கம்பனி ஊடகங்களுக்கு எதிராக செயற்படுகின்றது என ரணில் மேலும் தெரிவித்துள்ளார். (எ)






## விடுதலைப்புலிகளை அழிக்கும்...

நாடாளுமன்றம் சபாநாயகர் வி.ஜே.மு.லொக்குபண்டார தலைமையில் நேற்றுக்காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகியது. வழமையான தினப்பணிகள் முடிபடைந்ததும். வரவு செலவுத்திட்ட மூன்றாம் வாசிப்பு மீதான குழுநிலை விவாதம் ஆரம்பமாகியது.

ஜனாதிபதி செலவீனங்கள் மீதான விவாதத்திற்கு பதிலளித்து உரையாற்றும் போதே பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க மேற்கண்டவாறு கூறினார்.

பாதுகாப்புக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளமையானது தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தை தீவிரப் படுத்துவதற்கே என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் இரா.சம்பந்தன் நேற்று (நேற்று முன்தினம்) சபையில் உரைநிகழ்த்தும்போது கூறியதாக சுட்டிக்காட்டிய பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க அதை முற்றாக மறுப்பதாகவும் எடுத்துக் கூறினார்.

ஜனாதிபதி செலவீனங்கள் தொடர்பாக எதிர்த்தரப்பு எம்.பிக்கள் கூறியவற்றிக்கு பதிலளித்த உரை நிகழ்த்திய பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க மேலும் தெரிவித்ததாவது, விடுதலைப் புலிகளை அழிக்கும் வரை யுத்தம் தொடரும். ஆனால் அந்த யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிரானது அல்ல.

யுத்தம் நடைபெறுகின்றது; தாக்குதல்கள் இடம்பெறுகின்றன; அது உண்மைதான்; யுத்த செலவீனம் அதிகரிக்கப்பட்டுள்ளது தான்; அவையெல்லாம் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காகவேயாகும். ஜனாதிபதி செலவீனம் தொடர்பாக இந்த சபையில் பேசுகின்ற உறுப்பினர்கள் அதன் மூலமாக வருகின்ற அபி விருத்திகள் பற்றி எதுவுமே பேசவில்லை.

ஜனாதிபதியின் கீழ் செயற்படும் நிறுவனங்கள் ஜனாதிபதியின் தனிப்பட்ட நடவடிக்கைகளுக்காக அல்ல. மக்களை கருத்தில்கொண்டே அந்த நிறுவனங்கள் செயற்படுகின்றன என்றார். (எ)


## உடன் தேவை

❖ பத்திரிகை விநியோகஸ்தர்கள்

(இரவில் தங்கி நின்று அதிகாலையில் பத்திரிகை விநியோகம் செய்தல் வேண்டும்)

❖ பத்திரிகை மடிப்பவர்கள்

(இரவுக் கடமை, அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

❖ ஓவ்செற் இயந்திரம்

(பயிலுநர்கள் – ஆண்கள்)

**மேற்படி வெற்றிடங்களில் யாழ்-நகரத்தை அண்மித்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். பிற்பகல் 3 மணிக்கு நேரில் வரவும்.**

**வலம்புரி,**
**இல.3, 2 ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**நிர்வாக உத்தியோகஸ்தர்**


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 22.11.2007 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.